# CONTENT


- Editorial
- Provincial’s Messge
- **எமக்காக பிறந்தவர் எம்மில் பிறப்பார?**
- “ The Word of God was made flesh
- LIFE....
- **இயேசுவின் கனவும் கத்தோலிக்க சமயமும்**
- “Let’s go to Bethlehem”
- **இயேசு பிறப்பு கொண்டாட்டத்தின் அர்த்தம் என்ன?**
- Where there is Joy, There is Christmas.
- **கத்தோலிக்க திருமணங்களும் இன்றைய நிலைப்பாடும்**
- THE DATE OF CHRIST’S BIRTH
- **கிறிஸ்து பிறப்பதன் நோக்கம்**
- Three things the Holy Family Can Teach
- **தூய திருமணம்**
- Extinction and Endangered Species.
- **திருக்குடும்ப வாழ்வின் அடையாளங்கள்**
- **விடிவெள்ளியின் உதயம் பாரினிலே**
- G R A T I T U D E
- **மரியின் மழலையே வாராய்**
- The stepping stones
- **இல்லற வாழ்வின் இன்பங்களும் இன்னல்களும்**
- **விளக்கேற்றும் விடிவெள்ளி**
- **இனிய தேவனுக்கு இதய தாலட்டு**
- I saw a Star
- **மனித நேயமுடன் அவதரித்தார் இயேசு**
- Christmas gift
- **அர்ப்பணித்தோம்...**
- The Dream of Jesus and the Catholic Church
- **ஆ(அவ)தாரம் தேடும் மனிதம்**
- Traditions of Christmas Bells
- **இறை இரக்கமும் கிறிஸ்து பிறப்பும்**

♦ வேண்டாமே மணமுறிவு
♦ உன்னத விழா
♦ My experience of Christmas 2016
♦ நன்றியில் கரைந்த சில நிமிடங்கள்
♦ Christmas: The Birth of Christ Consciousness
♦ கிறிஸ்து பிறப்பு விழா எமக்கு தரும் செய்தி
♦ நிஜங்கள்
♦ Martillac Experience - 2016
♦ உறைந்திடு எம் மனங்களில்...
♦ நான் பெற்ற இறை அனுபவம்




# Editorial
## Christmas a feast of mercifulness

Christmas can have so many meanings for us, since it is the feast of the celebration of the Incarnation of the Word of God. Human language can never express the richness of the Word. The Word of God has so many connotations that we can never exhaust them. If we try to focus on the mercifulness of God we discover that in Jesus God's mercifulness took on human flesh. Mercy is a characteristic of God. Mercifulness is a divine quality which we all need to cultivate. God shows mercy to the whole humanity by not punishing us for our sins. Mercifulness is an aspect of love. It contains two important elements: A readiness to help those in need and a readiness to forgive and be reconciled where possible.

We sing with the Psalmist "Come and save us." It is another way of singing "O come Emmanuel," the ancient song of longing, yearning and hope that begins as a lament, a plaintive, plain song chant and becomes a rallying cry for those who put their trust in the promises of God.

**He has come; He is born; Where, how and why**

He chose nothing but poverty and mean surroundings, everything that was plain and ordinary and in the eyes of most people, obscure, so that it could be clearly seen that the Godhead alone transformed the world. That was why He chose His mother from among the poor of a very poor country, and became poor himself. This is the lesson of the crib – since there was no bed, our Lord was laid in a manger.

A new dawn begins in us with this child's appearance. The light has broken through the darkness of evil, into flesh and blood, into the world and into us. As we ponder the birth of the Redeemer in Bethlehem, we cannot step forward without pondering the life of the Holy Family. A family cannot be a family without marriage and this Holy Family is the model for all families. Marriage is a vocation - mutual self-giving in the sacrament of matrimony is grounded in the grace of Baptism, which establishes the foundational covenant of every person with Christ in the Church. In accepting each other and with Christ's grace the engaged couple promise each other total self-giving, faithfulness and openness to new life. "Faith, thus makes it possible for them to assume the goods of marriage as commitments that can be better kept through the help of the grace of the sacrament," writes our Pope Francis.

Grace filled Christmas & Happy New Year

# Provincial's Messge

***"For a child is born to us….." (Is. 9:5)***




Jesus is born today.

Jesus is a person who entered into His historical age and affirmed that living the fullness, relatedness and wholeness is possible.

The time is NOW. We speak more and more about a shift from EGO to ECO centeredness. "Relatedness" calls us to be conscious of entangling- the theory of nature and to join hands to journey to the unknown.

State of exodus, looking outwards are some challenges of today as we name them. Coming out of our ego and connect ourselves with all living beings is deeper experience of paradigm shift from darkness to the greater light.

The time is 'NOW' for this change, for a new birth.
**"All that we do now must be done in a sacred manner and it is a celebration of "LOVE".**
*"For in Christ we obtain freedom,…..In this appears the greatness of His grace, which He lavished on us.*
*In all wisdom and understanding,*
*God has made known to us God's mysterious design.*
*In Him and with Him God wanted to unite,*
*when the fullness of time had come,*
*everything in heaven and on earth".* ***(Eph.1: 7-10)***

Dear Sisters and Brothers, we are grateful for our blessings as we experience each other's company throughout this year.

I wish you all joyful Christ Centered Christmas and Blessings for the New Dawn.

*Sr. Christa Mariathas*

# எமக்காக பிறந்தவர் எம்மில் பிறப்பார?

வானத்து எல்லையெங்கும் வண்ணப் பூச்சொரியும்
கார் காலத்து ஓர் இரவு களிப்பான மார்கழியில்
ஞாலத்து இருளகற்றி நம் பாவம் தனை மீட்க
காலத்தின் தேவைக்காய் கன்னி மகன் அவதரித்தார்.

ஒளியாக வந்த இந்த உத்தம இறை மைந்தன்,
வழியாக எம் வாழ்வினில் வந்து பிறப்பாரா?
துளிகூட அமைதியின்றி துன்புறும் சோதரரின்,
துயரைத் துடைக்க மனத் துணிவைத் தருவாரா?
அரசியலே வேதமென்றும் அடக்குமுறை கொள்கையென்றும்,
அன்பை வெறுப்பவர்க்கு நற்பண்பைத் தருவாரா?

ஆணவத்தின் பிடியினிலே அல்லலுறும் இப்பூமியிலே
காண்பதற்கு புது உலகக் கதவு திறப்பாரா?
மனிதத்தைத் தொலைத்து விட்ட மகத்தான பூமியிலே
தனிமனித நேயத்தை தரணியெங்கும் விதைப்பாரா?
வன்முறைகள் சூழ்ந்த வக்கிர பூமியிலே
துன்பநிலை மாற்றி அன்புப் பூ மலர வைப்பாரா?

கண்டதே காட்சி என்ற கசப்பான நிலை மாற்றி
கொண்டதே உயர்வு என்ற குடும்ப நிலை அமைப்பாரா?
உதயத்து விடிவெள்ளி உலகுக்கு ஒளியூட்ட - எம்
இதயத்தைப் புதுப்பிக்க எம்மில் பிறப்பாரா?

அருட்சகோ. சுபாசினி.G



## “ The Word of God was made flesh
## And pitched His tent among us”.

Two thousand years ago, “In the stillness of the night, when the world was asleep, The Almighty Word leapt down”.

“He came through Mary, He came to us
Christ came to the land of Galilee”.

As we celebrate the Birth of Jesus year after year, in what way is it meaningful to us Christians - bearers of, and witnesses to the Christ?

“He comes, He comes forever He comes” not as off old – in a manger wrapped up in swaddling clothes – visible, helpless, yet loveable like any other baby.

Now, the same Word comes to us, day after day, moment by moment in simple, ordinary ways. In the events of our present days, in our trials and tensions, in the midst of our brokeness, in zeal of our love and fidelity, in the struggles and pains of the human beings, in the mud of our humanness, in the cry of the poor, in the aching of our mother earth, in our daily dyings, and risings – won with Him, “He is there!! For He comes”.

In our brokenness, in our joys, He as the “ unseen guest”, asks us for accommodation in our hearts, to be invited as our Travelling companion, along the tedious lifes long journey, waiting only to hear our request, “stay with us, it is towards evening”, “the night is dark, amidst the encircling gloom “Lead Thou me on”.

Many are the ways He keeps on coming, knocking at the door of our hearts. Have you not heard His silent steps? He comes, He comes, forever He comes,

Jesus wants to make His home, within us – His mysterious coming – though beyond our expectation- in the inside spirit of all the hum rums of our life – is very real. In the stillness of our hearts, in solitude and prayer, we will be able to welcome His mysterious coming! Let us be still; alert and pray with the Spirit and Bride saying:

“Amen, Come Lord Jesus”

*Sr. Aquinas*

# LIFE....

Isn't life a crystal blue waterfall that runs until dry?

Isn't life a roller coaster that goes high and low....
and save the tears for when it's time to get off?

Isn't life your everlasting dictionary of nurturing the mind?

Isn't life the magic of God and Mother Nature combined?

Isn't life full of joy and happiness with some
losses along the way?

Isn't life a book of adventure stories and when it ends,
you finish happily?

Isn't life your own choice and bright path, an independent decision?

Isn't life YOUR life, you create it, friends will help you, and family will
keep you happy along the way?

Mr. Keiaron Joseph




உயர்ந்த எண்ணங்களை உடையோர் ஒரு நாளும் தனித்தவராகார்
– காந்தி அடிகள்

# இயேசுவின் கனவும் கத்தோலிக்க சமயமும்

கிறிஸ்துவின் கனவைச் சிந்திக்க இறைத்தந்தையின் கனவு என்ன என்பதை முதலில் விளங்கிக் கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.

இறைதந்தையின் கனவு என்ன? என்று பார்க்கும்போது திருவிவிலியத்தின் தொடக்கநூல் இவ்வாறு கூறுகின்றது; வனப்புமிகு ஏதேன் தோட்டம். வானளாவ உயர்ந்த மரங்கள். கண்ணைக் கவரும் வண்ணமலர்கள், நாவிற்கினிய கனிகள், அசைந்தாடும் ஆறுகள், இன்னிசை எழுப்பும் பறவைகள், நடமாடித் திரியும் விலங்கினங்கள். எல்லாமே ஒன்றித்து வாழ்ந்த இன்பமான வாழ்வு. எங்கும் அமைதி! எதிலும் அமைதி!! எப்போதும் அமைதி!!! என ஒருங்கிணைந்து வாழ்ந்த அற்புதமான அருள்நிறை வாழ்வு.

அன்பு மயமாக, அம்மையும் அப்பனுமாய் விளங்கும் இறைதந்தை தன் மறைபொருளின் உண்மையை மனிதனுக்கு வெளிப்படுத்த விரும்பினார். அதனை மனிதனும், படைப்பு அனைத்தும் வாழ்வின் அனுபவமாக்க வேண்டும் என்று ஆவல் கொண்டார். எனவே தன் சாயலும், அழியாத ஆன்மாவும், அருளுயிரும், ஆய்ந்துணரும் நுண்ணறிவும் கொண்ட ஆணையும் (ஆதாம்) பெண்ணையும் (ஏவாள்) இன்பவனத்தில் வாழ வைத்தார். பஞ்ச பூதங்களின் (நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம்) அரவணைப்பில் படைப்பாற்றலும், தெய்வீக சக்தியும் கொண்டவர்களாக விளங்கச் செய்தார். அவர்கள் தம்மோடும், தம்மைப் படைத்தவரோடும், ஒவ்வொரு மனிதரோடும், இயற்கையோடும், உலகத்தோடும் ஒத்திசைவோடு அன்பை அடித்தளமாகக் கொண்டு, தூய்மையான உறவில் வளரவும், ஒன்றை ஒன்று ஏற்று, மதித்து, தாங்கி, பாதுகாத்து ஒன்றுக்கொன்று வாழ்வு கொடுக்கவும், தமக்குள்ள வளங்களைப் பகிர்ந்து, படைப்பைக் கண்காணித்து, விருத்தி செய்து பொறுப்போடும், பிரமாணிக்கத் தன்மையோடும் செயல்பட வேண்டும் என்று திருவுளம் யொண்டார். ஆட்தன்மையில் தாம் மூவராய் இருந்தாலும் ஒரே கடவுளாக இருந்து செயலாற்றுவது போல எல்லாமும், எல்லாரும் ஒன்றாக, ஒரே தந்தையின் பிள்ளைகளாக, ஒருவருக்கொருவர் சகோதரர்களாக, இறைகுடும்பமாக வாழ வேண்டும் என்று ஆசித்தார்.

தாகம் கொண்டார். கனவும் கண்டார். இந்தக் கனவை நனவாக்க "நாம் உங்கள் தந்தையாய் இருப்போம், நீங்கள் நம் மக்களாய் இருப்பீர்கள்"( எசேக் 7:23 ) என்ற நிலையான அன்பின், முடிவில்லாத உடன்படிக்கையால் உறுதி செய்தார். முத்திரையிட்டார்.

நடந்ததுதான் என்ன? ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளில் துளிர்விடச் செய்த கனவு அலகையின் சூழ்ச்சியால் நசுக்கப்பட்டது. மனிதனின் சுயவிருப்ப ஆசையால் பொசுக்கப்பட்டது. கீழ்ப்படியாமையால் சீர்குலைக்கப்பட்டது. இதனால் ஆதிமனிதன் இறைவன் அளித்த அருள்வாழ்வை இழந்தான். அமைதியைத் தொலைத்தான். குற்றப்பழியால் தன்னையே ஒளித்துக் கொண்டான். தீமையும், பாவமும் உடலிலும், உள்ளத்திலும், ஆன்மாவிலும் நுழைந்ததால் தமக்குள் பிளவுபட்டனர். உடன் சகோதரரோடும், அயலவரோடும் முரண்பட்டனர். இயற்கையை அழித்தனர். இயற்கையும் இவர்களை எதிர்த்தது. குழும நிலை குலைந்தது. கூட்டு வாழ்வு சிதைந்தது. தனக்குத் தனக்கு என்று சேமிக்கும் நுகர்வு கலாசார வாழ்வு தலைதூக்க தொடங்கியது. இதனால் பகிர மறுத்தனர். போட்டியும், பூசலும்,பொறாமையும், காழ்ப்புணர்வும், எதிர்ப்பும் மேலோங்கி வளர்ந்தது. வீட்டுக்கு வீடும், நாட்டுக்கு நாடும், இனத்துக்கு இனமும், எதிரும் புதிருமாகி இறைதந்தையின் அழகிய இன்பக்கனவைக் களங்கப்படுத்தினர்.



களங்கத்தைத் துடைத்து தன் அன்புக்கனவை நனவாக்க காலம் கடந்தவராக இருந்த தம் ஒரே மகனைக் காலத்திற்குள் நுழைய அனுப்பினார். "தம் ஒரே பேறான மகனை அளிக்கும் அளவு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (யோவா 3:16) செல்வமிக்கவரை ஏழையாக்கினார். அரசனானவரை அடிமையாக்கினார். மணிமுடி தாங்கியவரை முள்முடி தாங்கச் செய்தார். நிறைவுள்ளவரை

வெறுமையாக்கினார். காலத்திற்குள் நுழைந்தவர் தந்தையின் கனவை நிறைவேற்றுவதே தன் உணவு என்பதை அடிநாதமாகக் கொண்டு, அன்பு, ஏழ்மை, கீழ்ப்படிவு என்னும் வாழ்க்கை முறையைத் தனதாக்கி இப்பிரபஞ்சத்தில் வாழ்ந்தார். இப்பிரபஞ்சம் முழுவதற்கும் வாழ்வு கொடுக்க தன்னை அர்ப்பணமாக்கினார். இதையே தூய யோவான் "ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" (யோவா10:10) என்ற இறைவார்த்தையால் எண்பிக்கின்றார்.

"ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்"(லூக் 4:18:19) என்று லூக்கா எடுத்துக் கூறும் இந்த இறைவார்த்தை ஏசாயா இறைவாக்கினரால் முன்னுரைக்கப்பட்டதாகும்.(61:1-2) மனிதனாக இம்மண்ணில் வாழ்ந்த இயேசு இந்த இறைவாக்கைத் தன் பணியினாலும், வாழ்வினாலும் நிறைவேற்றினார். சென்ற இடமெல்லாம் நன்மை செய்தார். விளிம்பின் ஓரங்களை தேடிச் சென்றார். சட்டமென்ற நூல்பிடித்து வாழ்வு கொடுக்க மறுத்தவர்களின் கடினப்போக்கை, இரக்கமற்ற செயல்களை, சடங்கு சம்பிரதாயங்களை, வழிபாட்டு முறைகளை வன்மையாகக் கண்டித்தார், சாடினார், சுட்டிக்காட்டினார். "உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கின்றேன் உங்கள் வழிபாட்டு கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை................மாறாக, நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப் பொங்கி வருக!" (ஆமோ 5:21-24) என்று இடித்துரைத்த நீதியின் இறைவாக்கினர் ஆமோஸின் இறைவாக்கிற்கு இயேசு செயல் வடிவம் கொடுக்கின்றார். இவ்வாறு பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள் அனைத்தையும் இயேசு, துன்புறும் ஊழியனாக தன்னை அர்ப்பணித்து படைப்புக்கள் அனைத்தையும் தம் வழியாக இறைத்தந்தையுடன் ஒன்றிணைத்தார்.

தனது மனிதவதாரத்தாலும், துன்புறும் ஊழியனாக கல்வாரியில் தன்னை உடைத்து, நொறுக்கி முழுமையாகக் கையளித்த தனது பலிவாழ்வினாலும், ''எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக'' (யோ 17:21) என்று செபித்த செபத்திற்கு இயேசு செயல் வடிவம் கொடுத்தார். தன்னை நறுமணம் வீசும் பலிப்பொருளாக்கினார். தனது முப்பத்திமூன்று வருட மண்ணக வாழ்வினால் மனுக்குலத்தையும், படைப்பனைத்தையும் தந்தையோடு ஒப்புரவாக்கி, அவரின் மறைபொருளான திட்டத்தின் கனவை நனவாக்கினார். இதையே தூய பவுல் ''இயேசு கட்புலனாகா கடவுளது சாயல். படைப்பனைத்திலும் தலைப்பேறு; ஏனெனில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை- கட்புலனாகுபவை கட்புலனாகாதவை- அரியணையில் அமர்வோர், தலைமைதாங்குவோர், ஆட்சியாளர், அதிகாரம் உடையோர் ஆகிய அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர். அனைத்தும் அவர் வழியாக அவருக்காகப் படைக்கப்பட்டன. அனைத்திற்கும் முந்தியவர் அவரே. அனைத்தும் அவரோடு இணைந்து நிலை பெறுகின்றன. திருச்சபையாகிய உடலுக்குத் தலையும், தொடக்கமும் அவரே. எல்லாவற்றுள்ளும் முதன்மை பெறுமாறு இறந்து உயிர்த்தெழுவோருள் அவர் தலைப்பேறு ஆனார். தம் முழு நிறைவும் அவருக்குள் குடிகொள்ளக் கடவுள் திருவுளம் கொண்டார். சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலை நாட்டவும், விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர் வழியாகத் தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்''(கொலோ 1:15-20) என்றும், எபேசியருக்கு எழுதிய மடலிலே ''கால நிறைவில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்றுசேர்க்க வேண்டும் என்ற திட்டமே அம்மறைபொருள்''(எபே1:10) என்றும், புனித யோவான் தன் நற்செய்தியில் ''தம் இனத்திற்காக மட்டுமன்றி, ***சிதறி வாழ்ந்த கடவுளின் பிள்ளைகளை ஒன்றாய்ச் சேர்க்கும்*** நோக்குடன் அவர்களுக்காகவும் இறக்கப்போகின்றார்'' (11:52) என்றும் எடுத்துக் கூறி இறைதந்தையின் கனவே கிறிஸ்துவின் கனவு என்பதை எண்பிக்கின்றார்கள்.

இயேசுவின் இலட்சியக் கனவைத் தொடர்ந்தாற்ற பாமரரும், பாவிகளும், படித்தவர்களும், பண்பாளர்களும், பெண்களும், ஆண்களுமாக பலவிதமானோர் அழைக்கப்பட்டார்கள். உருவாக்கப்பட்டார்கள். தூயஆவியால் அருட்பொழிவு செய்யப்பட்டார்கள். பெந்தக்கோஸ்தே பெருவிழாவோடு ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ மதத்தை உலகெங்கும் நற்செய்தியாக அறிவிக்க அப்போஸ்தலர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் எதை நற்செய்தியாக முழக்கமிட்டார்கள்? ‘‘கிறிஸ்து உயிர்வாழ்கின்றார்’’ என்ற இயேசு அனுபவத்தையும், அந்த இயேசுவை வாழ்வில் அனுபவிக்க மனம்மாறி திருமுழுக்குப் பெற்று, அவரோடு இறந்து அவரோடு உயிர்க்க வேண்டும் என்ற நற்செய்தினையே முழக்கமிட்டார்கள். இதனை விசுவசித்து ஏற்றுக் கொண்டவர்கள் அனைவரும் ஒன்றாய் செபிக்கும் குழுமமாக, நட்புடன் உறவாடும் குழுமமாக, சாட்சியம் பகிரும் குழுமமாக செயல்பட்டனர். இவர்களின் வாழ்வால் பலரும் கவரப்பட்டனர். சிலர் அச்சப்பட்டனர். நாளுக்கு நாள் உயிர்த்த இயேசுவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளின் கூட்டம் எண்ணிக்கையால் அதிகரிக்கத் தொடங்கியது. சவால்களும், சோதனைகளும் மறுபக்கத்தில் நெருக்கியது. விசுவாசத்தில் உறுதியற்றவர்கள் மதத்தை விட்டு விலகினர். விசுவாசத்தில் உறுதியுடையோர் சவால்களை எதிர்கொண்டு, சிலுவைகளை சுமந்து கிறிஸ்துவோடு இறந்து உயிர்க்க வேதசாட்சிகளாக மரித்தார்கள். புனிதர்களானார்கள்.

காலப்போக்கில் கிறிஸ்தவர்களின் தொகை பெருகியபோது விசுவாசிகளுக்குப் பதிலாக கிறிஸ்தவ சான்றிதழ் பெற்று, திருச்சபையில் தமக்குள்ள உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் பெயரளவு கிறிஸ்தவர்களும், தலைவர்களும் பெருகினார்கள். இதனால் உயிர்த்த இயேசு அனுபவமற்ற கிறிஸ்தவர்களைக் கொண்டதாக கிறிஸ்தவ மதத்தின் போக்குகள் இருந்தன. இதனால் கிறிஸ்தவ மதத்திற்கு அடித்தளமாக இருக்க வேண்டிய உயிர்த்த இயேசுவோடு கொள்ளும் ஆள்தன்மையான உறவின் இறை அனுபவமும், நற்செய்தியாளர் மத்தேயு 25:40ம் வசனத்தில் குறிப்பிடும் ‘‘மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்’’ என்ற பிறரன்புச் செயல்களும், இறைவார்த்தையின் ஒளியில் வாழ்வின் தேடல்களுக்கு

அர்த்தம் காணும் வாழ்க்கை முறைகளும் அருகிப் போயின. இதனால் கிறிஸ்தவ மதத்தினதும், கிறிஸ்தவர்களினதும் தாற்பரியத் தன்மை நாளுக்கு நாள் தளர்வு நிலை அடையத் தொடங்கியது. இன்றும் இது தொடர்வது கண்கூடான உண்மையுமாகும்.

இன்று கத்தோலிக்க சமயம் என்பது ஆலயத்தோடும், வழிபாட்டோடும், வெறும் சடங்கு ஆசாரங்களோடும் திருப்தி காணத் துடிக்கும் மதமாக மாறுகின்ற அபாயநிலை பொநிலையினரிடையேயும், திருநிலையினரிடையேயும் உருவாகியிருக்கின்றது. இருந்த போதிலும் கிறிஸ்துவை தலையாக கொண்டு, மறையுடலாகிய திருச்சபை இயங்குவதால் பலவீனங்கள் மத்தியிலும், சவால்கள் மத்தியிலும் உயிர்த்த இயேசுவின் பிரசன்னமும், தூயஆவியானவரின் வழிநடத்துதலும், நம்பிக்கையுள்ள கிறிஸ்தவர்களும், அருட்பொழிவு செய்யப்பட்ட திருநிலையினரும் இருப்பதால் இன்றும் கத்தோலிக்க சமயம் உலகெங்கும் பரந்து விரிந்து வளர்ந்து வருகிறது என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

ஆக, கத்தோலிக்க சமயம் என்பது திருமுழுக்கில் (பிறப்பிலிருந்து) தொடங்கி நோயில்பூசுதல் (இறப்பு வரை) ஈறாக அருட்சாதனங்களைப் பெறும் ஒரு சடங்கு முறையோ அல்லது வழிபாடுகளோடு மட்டும் ஆன்மீக திருப்தியடையும் நிலைப்பாடோ அல்ல. மாறாக தாயின் கருவறையிலிருந்து வெளிப்பட்டு கல்லறைக்குள் அடங்கும் வரை வாழப்படும் நாளாந்த வாழ்வின் தேடலும், விசுவாசப் பயணமுமாகும்.

கத்தோலிக்க சமயம் மற்றைய மதங்களைப் போல் கொள்கைகளை தந்து வாழுங்கள் என்று கூறுகின்ற மதமல்ல, மாறாக ‘‘வழியும், உண்மையும், வாழ்வும் நானே’’(யோவான் 14:6) ‘‘இருக்கிறவர் நானே’’(யோ 8:24) ‘‘ஆடுகளுக்கு வாயில் நானே’’ (யோ 10:7) ‘‘நல்ல ஆயன் நானே’’ (யோ10:11) ‘‘உலகின் ஒளி நானே’’ (யோ 8:12) ‘‘வாழ்வு தரும் உணவு நானே’’ (யோ 6:51) என்று வாழ்ந்து காட்டிய இயேசுவின் வாழ்வை எமதாக்கி ‘‘இதோ உலகம் முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்’’ ( மத் 28:20 ) என்று கூறி இன்றும் எம்மோடு வாழும் உயிர்த்த கிறிஸ்துவின் பிரசன்னத்தை எமக்குள்ளும். இப்பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லாவற்றிலும் கண்டு

ஒன்றுக்கு ஒன்று வாழ்வு கொடுக்கும் தொடர்ச்சியான பின்தொடர்தலின் அர்ப்பண வாழ்வாகும்.

இதையே தூய பவுல் தம் மடல்களில் “கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றும் நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாகும்.” (1கொரி 15:14) என்றும், “கடவுளின் ஆவியால் இயக்கப்படுகின்றவர்களே கடவுளின் மக்கள்” (உரோ 8:14) என்றும் “கிறிஸ்துவின் ஆவியை ஒருவர் கொண்டிராவிடில் அவன் கிறிஸ்தவன் அல்ல” (உரோ8:9B)-(1980ல் அச்சிடப்பட்ட பரிசுத்த வேதாகமத்தில் உள்ளபடி) என்றும் தம் கடிதங்களில் குறிப்பிடுகின்றார். எனவே திருமுழுக்கு அருட்சாதனத்தின் வழியாக கத்தோலிக்க சமயத்தில் இணைந்துள்ள பொதுநிலையினரும், திருநிலையினரும் நாளாந்தம் தம்மைப் புதுப்பித்தலுக்கு அழைக்கும் இறையாவியின் குரலொலிக்கு விட்டுக்கொடுத்து, இறையரசின் விழுமியங்களால் கத்தோலிக்க சமயத்திற்கு, கத்தோலிக்கர்கள் என்ற பெயருக்கும் ஏற்ப வாழும்போது அது குடும்பத்தில், சமூகத்தில், பங்கில், பணித்தளங்களில் நிறுவனங்களில், அமைப்புக்களில் பாரிய தாக்கத்தைக் கொண்டு வரும் என்பதில் சந்தேகமில்லை.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது கத்தோலிக்க சமயம் என்பது தூயஆவியினால் இயக்கப்பட்டு, உயிர்த்த யேசுவோடு உறவுகொண்டு, ஒவ்வொருவரிலும், ஏன் இப்பிரஞ்சம் முழுவதிலும் இறைபிரசன்னத்தை கண்டு, ஒன்றுக்கொன்று வாழ்வு கொடுக்கும் வாழ்க்கை முறையாகும். இதையே இயேசு, பொன் விதியாகிய “பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்” என்றும் (மத் 7:12) “நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல் நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்” (யோவான் 13:34) என்றும் எடுத்துக் கூறி கத்தோலிக்கத்தினதும், கத்தோலிக்கர்களினதும் அடிப்படைத் தத்துவமான இறையன்பையும், பிறரன்பையும் ஆணிவேராகக் கொண்டு, நிறை உண்மைகளை நோக்கி வழிநடத்தும் தூயஆவியானவரின் (யோ16:13) செயல்பாடுகளை வாழ்வில் பயிற்சிப்படுத்தி, “நாளாந்த

சிலுவைகளை சுமந்து''(லூக் 9:23) இயேசுவைப் பின்பற்ற அழைக்கும் அன்றாட வாழ்வே கத்தோலிக்க சமயமாகும்.

கத்தோலிக்க சமயம் என்பது திருமுழுக்கில் தொடங்கி நோயில்பூசுதல் வரை அருள் வழங்கும் சாதனங்களை மட்டும் பெற்றுக் கொள்ளும் மதமோ அல்லது ஆலயங்களைக் கட்டி, திருவிழாக்களைப் போட்டி போட்டுக் கொண்டாடும் மதமோ அன்றேல் திருவழிபாட்டு ஆண்டில் வரும் திருவருகைக் காலம், தவக்காலம், பாஸ்கா காலம், பொதுக்காலம் என்பவற்றை வாடிக்கையாக நினைவுகூரும் மதமோ அல்ல. மாறாக உயிர்த்த இயேசுவோடு உறவை வளர்த்து, இறைவார்த்தையின் ஒளியில் வாழ்விற்கான வழிகளைக் கற்றுக் கொண்டு, இறையரசின் விழுமியங்களாகிய தூயஆவியின் கனிகளாலும்(கலா 5:22) கொடைகளாலும் (1கொரி 12:1-11 ) வாழ்வில் எதிர்கொள்ளும் போராட்டங்களை வென்று ''எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக'' என்ற கிறிஸ்துவின் கனவை நனவாக்க அழைக்கும் உயிர்த்த கிறிஸ்துவின் அழைப்பாகும்.

ஆக, கத்தோலிக்க சமயம் என்பது ஒரு உறவுப் பயணமே ஒழிய வெறும் சடங்குகள், சம்பிரதாயங்கள், விழாக்களோடு முடிவடைந்துவிடும் ஒன்றல்ல. இன்று கிறிஸ்தவ மதத்தைக் கண்ணைப் பறிக்கும் காட்சிப் பொருளாக மாற்றும் சோதனைகளும், சூழமைவுகளும் வீறுகொண்டு எழுந்துள்ளன. இதனை நாம் வென்று வாழ வேண்டிய அவசரத் தேவையும் விழிப்பும் எழுந்துள்ளது என்று எமது கத்தோலிக்க மதத்தின் தலைமை ஆயனாகிய திருத்தந்தை பிரான்சிஸ் சுட்டிக்காட்டுகின்றார். அவரின் கூற்றுப்படி......

➢ இறையாட்சி வேறு எங்குமல்ல, எங்களிடையே இருக்கின்றது. இது ஒவ்வொருவரின் அன்றாட வாழ்விலும் வாழப்பட வேண்டிய உண்மையே தவிர, பலரையும் கவர்ந்திழுக்கும் காட்சிப் பொருளல்ல கத்தோலிக்க சமயம் என்றும்

➢ புதிது புதிதாக செய்திகளையும், செயற்பாடுகளையும் அளிப்பதற்கு முயற்சிகள் செய்வது நமது நம்பிக்கை அல்ல, மாறாக இயேசுவில் முழுமையாக வெளிப்பட்ட இறைவார்த்தையை, வாழ்வால் இவ்வுலகிற்கு உணர்த்துவதே கத்தோலிக்க சமயம் என்றும்

➢ உண்மையான இறையாட்சி என்பது வீட்டில் ஏற்றப்படும் ஒளிவிளக்காகவும், அப்பம் சுடுவதற்கு மாவில் வைக்கப்படும் புளிப்பு மாவாகவும் இருப்பதே என்றும், அது நிமிடத்துக்கு நிமிடம் தோன்றி மறையும் வாணவேடிக்கை அல்ல என்றும்

➢ இறையாட்சியின் வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது நமது பொறுமையும், கடின உழைப்பும் என்றும், நம் உள்ளத்தில் விதைக்கப்பட்ட இறைவார்த்தையை பொறுமையோடு பேணி வளர்க்க அழைக்கப்பட்டுள்ளோம் என்றும், தெளிவாக உண்மைகளைத் கோடிட்டு காட்டுகின்றார். (ஆதாரம் - வத்திக்கான் வானொலி)

எனவே, மனம் மாறவும், பாதைகளைச் செப்பனிடவும், விழித்தெழவும் அழைக்கும் இத்திருவருகைக்காலம் - திருமுழுக்கின் வழியாக கத்தோலிக்க சமயத்தில் இணைந்து, கத்தோலிக்கர்களாக வாழும் எம் வாழ்வின் அழைப்பைச் சீர்தூக்கிப் பார்க்க அழைக்கின்றது. எனவே, இவ்வழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து தூய பவுல் கொலேசையருக்கு எழுதிய மடல் 3:1-7ல் குறிப்பிப்பிடும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குரிய வாழ்க்கைமுறையை எமதாக்கி மூவொரு இறைவனை மகிமைப்படுத்துவோம்.

சிறப்பாக அழைப்புக்குள் இன்னொரு அழைப்பாக திருக்குடும்ப சபை அப்போஸ்தலிக்க துறவிகளையும், தியானயோக துறவிகளையும், திருமடச்சார்பற்ற துறவிகளையும், திருக்குடும்ப பொதுநிலை அங்கத்தவர்களையும், குருக்களையும் உள்ளடக்கிய ஐந்து அழைத்தல்களை கொண்டு விளங்குகின்றது. பொதுநிலையினரையும், திருநிலையினரையும் அங்கத்தவர்களாக கொண்டிருக்கும் நாம் இன்னுமொருபடி மேலாக எம் வாழ்வைச் சீர்தூக்கிப் பார்க்க அழைக்கப்படுகின்றோம்.

ஏனென்றால் எம் திருக்குடும்ப சபையின் ஸ்தாபகர் பீற்றர் பியன்வெனு நோஆய் இறைதந்தையினதும், இயேசுவினதும் கனவைத் தனதாக்கினார். திருமுழுக்கு அழைப்பு இதற்கு ஓர் அடித்தளம் என்பதை தன் வாழ்வின் அனுபவமாக்கினார். மூவொரு இறைவனின் அன்பும், ஒன்றிப்பும், ஐக்கியமும் நிறைந்த வாழ்வை, ஆதிக்கிறிஸ்தவ குழுமத்திடம் விளங்கிய பண்புகளை, திருக்குடும்பத்தின் மாதிரிகைகளை ஒவ்வொரு

கிறிஸ்தவனும், கிறிஸ்தவளும், ஒவ்வொரு குடும்பமும், சமூகமும், பங்கும் வாழ வேண்டும் என்று கனவு கண்டார். பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் சிதறுண்டு, பிளவுண்டு, உருக்குலைந்து, நொந்து வாழும் மக்களை தேடிச் சென்று வாழ்வு கொடுப்பவர்களாக, எமது அருங்கொடையாகிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்பும் திருக்குடும்ப அங்கத்தவர்களாக ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என்பதே அவரின் பேராவல்.

இறைதந்தையின் கனவையும், எம் ஸ்தாபகரின் கனவையும் நனவாக்கும் பாரிய பொறுப்பை திருக்குடும்ப அங்கத்தவர்களாகிய நாம் சிறப்பாக முறையில் பெற்றுள்ளோம். எல்லோரையும் இறைதந்தைக்குள் இணைய வைக்கும் “ஐக்கியத்தை” (Communion) அருங்கொடையாகக் கொண்டு வாழவும், இறையரசின் பணிகளை ஆற்றவும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை காத்திரமாக உணர்வோம். குடும்பங்களே இறையரசின் இதயம் என்பதில் ஆழமான அக்கறை கொள்வோம். இந்த இதயத்தின் துடிப்பு நின்றுவிட்டால் எல்லாமே மடிந்துவிடும். இந்த முக்கியத்துவத்தை உணர்ந்தே நாம் எதிர்கொள்ள இருக்கும் புதிய ஆண்டை குடும்ப ஆண்டாக” திருத்தந்தை பிரகடனப்படுத்தியுள்ளார். அதுமட்டுமல்லாமல் “அன்பின் மகிழ்ச்சி” என்ற சுற்றுமடலின் ஊடாக அன்பும், ஐக்கியமும் நிறைந்த குடும்பங்களை உருவாக்க நாம், வாழவும், வழிகாட்டவும் தேவையான சிந்தனைகள், ஊக்குவிப்புக்களை இத்திருமடல் ஊடாகத் தருகின்றார்.

எனவே விழித்தெழுந்து செயல்படுவோம். தூயஆவியானவர் அருளும் புதிய இதயத்தை அணிந்து கொள்வோம். எம் எண்ணங்கள், உணர்வுகள், வார்த்தைகள், தேடல்கள், ஏக்கங்கள், செயற்பாடுகள், அணுகுமுறைகள் அனைத்தும் எம் தனிவாழ்விலும், செபவாழ்விலும், குழும வாழ்விலும், பணிவாழ்விலும் பங்குத் திருஅவையிலும் எப்படி இருக்கின்றது என்பதை சீர்தூக்கிப் பார்த்து பாதைகளை செம்மைப்படுத்துவோம். இறைத்தந்தையின் கனவை ஒரே மறையுடலாக இணைந்து நனவாக்குவோம். இக்கனவு எக்காலத்திற்கும் பொருத்தமானது என்பதில் ஆணித்தரமான உறுதிகொண்டு இன்றே, இப்பொழுதே வீரத்துவத்துடன் செயல்படுவோம்.

அருட்சகோ. லூமினா.P

# "Let's go to Bethlehem"

Mary and Joseph look at the child in the manger
And wonder if this child be the Prince of Peace?
His neighbors are those who are stranger,
This is the light born for darkness to cease.

Shepherds believed the savior is born as a child
Good Shepherd lies helpless amidst the beasts
He humbles to destroy pride in our nature wild
Those with goodwill change their days to feasts

The wise men made journey of many a mile
Following the star, Bethlehem did they reach
There were Herod and others with a guile
They knew not the One whom they did preach



Silence! God, in the child, comes to us so close
Making his tent here He's with us for ever
He'll save us and dispel forms of sin and woes
His hands are open, his doors are closed never

We must to simple as the shepherds at stable
Or be like the magi to stoop down and see
God welcomes everyone to his banqueting table
Who recognize the poor become worthy to be

The star is not seen always nor angels do sing
Our mission remains to proclaim God's love
Acts of mercy to those in need of something
Who do deeds of love reap peace from above.

Let's go to Bethlehem and together adore.
The child who to judge will come once more.

# இயேசு பிறப்பு கொண்டாட்டத்தின் அர்த்தம் என்ன?

ஆதியிலே இறைவன், ‘‘உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்திற்கும் அவள் வித்திற்கும் இடையே பகையை உண்டாக்குவேன்’’ என்று கூறி கன்னி மரியாளையும் இயேசுவையும் முன் குறித்து வைத்தார். ஆதித் தாய் தந்தையினால் நல்வாழ்வை இழந்த மனுக்குலத்தை மீட்க, இறைவன் இரக்கம் கொண்டு தனது ஒரே பேறான மகனை, உலகிற்கு உகந்து அளித்தார். அன்று இஸ்ரவேலின் மக்கள் தங்களை அடிமைத்தனத்தில் இருந்து மீட்க மெசிய வருவார் என்று மிக ஆவலுடன் எதிர்ப்பார்த்திருக்க ஏழையின் உருவில் மாட்டுத் தொழுவத்தில் இயேசு பாலன் பிறந்தார். இந்த மீட்பரின் பிறப்பை நாம் நத்தார் திருவிழாவாக கொண்டாடுகின்றோம். தற்காலத்தில் பலதரப்பட்ட கொண்டாட்டங்கள் நடைபெற்றாலும் எங்கள் பாலக இயேசுவின் பிறப்பு விழா வித்தியாசமானது. உலகம் எங்கும் எல்லா மக்களும் சமய வேறுபாடு இன்றி, தங்களுடைய கலை காலச்சாரங்களோடு கொண்டாடுகின்றனர்.

கபிரியல் தூதர் மரியாளிடம், ‘‘அருள் மிக பெற்றவளே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்,’’ என்று கூறியவுடன் மரியா இது எங்ஙனம் ஆகும்? என கலங்கினார்கள். ஆனால் எலிசபெத் கருவுற்ற செய்தியை கேட்டதும், இறைவனால் ஆகாதது ஒன்றும் இல்லை என உணர்ந்து ‘‘நான் ஆண்டவரின் அடிமை உன் சொற்படியே எனக்கு நிகழட்டும்’’ என்று கூறினார். இறைவனை தன் உதரத்தில் கருத்தரித்தவுடன் மரியா இறை இரக்கத்தால் தூண்ட பெற்று பல கிலோ மீட்டர் தாண்டி எலிசபெத் அம்மாவிடம் சென்று, இரக்கத்திற்கு செயல் வடிவம் கொடுத்து ஆறு மாதம் தங்கி இருந்து பணிவிடை செய்தார். மரியாளிடம் குடிகொண்ட இயேசு பாலன் எங்கள் உள்ளக் குடிலிலும் குடி கொள்ள வேண்டும். வாக்கு மனுவானார் அவர் நம்மிடையே குடிகொண்டார் ‘‘இம்மனுவேல்’’ என்றால் கடவுள் நம்மோடு என்பதாகும்.

இயேசு பாலன் இதயத்தில் பிறக்கும் போது எமது இதயத்தில் இரக்கம் உதிக்கும். நாம் நத்தார் விழாவின் போது இரக்கம் நிறைந்தவா்களாக கிறிஸ்மஸ் தாத்தா போல எல்லாருக்கும் நேரத்தை, உணவை, உடைமையை பகிர்ந்து வாழ வேண்டும்.

இரக்கத்தின் உச்சமான இயேசு தேவ+ நல் +கருணையில் நம்மோடு வசிக்க பூரணமாக நிறைவாக ஒளியாக இருக்கின்றார். திருக்குடும்ப சபையில் ஐந்து கிளையினரும் அவரிடம் சென்று அவரை புகழ்ந்து ஆராதித்து எல்லா வற்றையும் அவரோடு பேசி நன்றி கூறி அவருடன் இருப்பதைப் பழக்கமாக்குவோம். நாளாந்தம் தேவ நற்கருணையை இதயத்தில் பெற்று விசுவாசத்தில் வளருவோம். “இயேசுவை தனிப்பட்ட முறையில் சந்திப்பவர்கள் அவரின் கருணையாலும் உண்மையாலும் எளிமை மற்றும் தாழ்ச்சியாலும் கவரப்பட்டு அனைத்தையும் துறக்க தயராக இருக்கின்றார்கள்” என எமது மேன்மையை தங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகின்றார். எனவே திருக்குடும்ப சபையின் அழைப்பை பெற்ற நாம் நல்ல பிதாவின் ஊற்றிலிருந்து பெற்ற பலனை உலகெங்கும் செயலாற்ற தடைகளைத் தகர்த்து இயேசு பாலனை இதயத்தில் தாங்கியவர்களாக முன்னேறிச் செல்வோம்.

**பாலக யேசுவே வாரீர் அமைதியை அருள்வீர்**

பெ. கில்டா கெலன்
திருக்குடும்ப பொது நிலையினா்.
பாசையூர்



# Where there is Joy, There is Christmas.

Christmas is not a "once upon a time" event which happened in a far off village called Bethlehem in Palestine before more than two thousand years ago, and which is recalled and celebrated annually by Christians all over the world, on 25th December.

In is rather a PRESENCE that is being lived here and now wherever we are and whoever we are, bringing us JOY and HAPPINESS. When someone extends a helping hand to another and reaches out to him/her in need, there is PRESENCE, there is REJOICING, there is HAPPINESS and there is CHRISTMAS [Mt 25: 31-46]




In Eygpt when the Israelites were put hardship and suffering and were groaning under the heavy burden of slavery, Yahweh told, "I have observed the misery of my people in Egypt I know their sufferings and I have come down to deliver them." "I have heard their cry" [Ex 3: 7-8].Wherever sufferings over power his people, there Yahweh is, there the presence of God, is to bring about comfort, and solace, relief and joy to them. The promise is:" I will be with you [Is 7:14] I will be Emmanuel the God" [Mt 1:21-22].

It should remind us as well as challenges us to be ministers of joy and delight to make people to rejoice at Jesus' birth.The joy and gladness that we will experience at his presence among us must make us messengers of this joyful presence of our Emmanuel – God to all the poor and the needy, the least, the last, the lost, and the left out.

May our Christmas Joy, which is "Joy in the Holy Spirit makes 'Jesus first, others next and I last' in that order in our lives.

*Sr. Subajini.G*
*Provincialate.*

# கத்தோலிக்க திருமணங்களும் இன்றைய நிலைப்பாடும்

படைப்பின்போது இறைவன் ஆணையும், பெண்ணையும் படைத்து குடும்பம் என்னும் ஆக்கத்தை உருவாக்கினார். மகிழ்வான, புனிதமான ஆரம்பமாக இருந்தது. காலச்சுழற்சியில், உலகம் பாவ இருளில் மூழ்கி, மனிதன் அழிவுப்பாதையில் நடப்பதைக் கண்ட அக்காலத்து திருமறை போதகர்கள் மனிதரை மீட்க பல முயற்சி எடுத்தார்கள். கிறிஸ்துவின் பிறப்பு அழிந்து போகும் மனிதக்குலத்திற்கு பெரும் ஆசீர்வாதமாயிருந்தது. அவரது போதனைகளையும், அறிவுரைகளையும் நடைமுறையில் பயன்படுத்த திருமறை ஆட்சியாளர்கள் அவற்றை கட்டளைகளாக, சட்டங்களாக, நற்செய்திகளாக, வேத போதனைகளாக வரையறுத்தனர். யேசு கிறிஸ்துவின் பிறப்பும், அவரது வாழ்வும் மற்றும் போதனைகள், புதுமைகள், மரணம், உயிர்ப்பு ஆகியவையும் இதற்கு சாதகமாக விளங்கின. அந்தவகையில் இறைமகன் யேசுவின் போதனையை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட அருட்சாதனங்களில் ஒன்று திருமணமாகும்.



“நீங்கள் இனி இருவரல்ல ஒருவர்” “இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்” என்ற இயேசுவின் போதனைகளை அடித்தளமாகக் கொண்டு ஏற்பட்டதுதான் திருமணம் என்னும் திருவருட்சாதனம். இப் புனிதமான திருமணம் கத்தோலிக்க மணமக்களுக்கு அளிக்கப்படும் ஆரம்ப ஆசீர்வாதம் இல்லற வாழ்க்கைக்கு இறைசக்தியாகவும் அமைகின்றது. அதனால் தான் கத்தோலிக்க திருமணம் செய்பவர் சில ஆன்மீக ஆயத்தங்களை முறைப்படி செய்யவேண்டும் என்று திருச்சபை சட்டமாக்கியுள்ளது.

எம் மக்களிடையே திருமணம் செய்யவிருக்கும் மணமக்கள் ஆன்மீக ஆயத்தத்தை விட சமூக ஆயத்தங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். தங்கள் குடும்பப்பெருமை, கௌரவம், பதவி, பணம்

இவற்றை வெளிக்காட்டும் ஓர் சந்தர்ப்பமாகப் பயன்படுத்துகின்றனர். மனிதன் ஒரு சமூகப் பிராணி ஆதலால் தன் கௌரவத்தை வெளிப்படுத்துவது தவறு என்று முற்றாகக் கருதக்கூடாது. ஆன்மீக ஆயத்தம் ஒரு நாள் வாழ்வுக்கல்ல வாழ்வுக் காலம் முழுவதும் தமது இல்லற வாழ்வு மகிழ்வான நல்லறமாக அமையப் பயன்படும் ஆயத்தம் என்பதை மறக்கக்கூடாது. இவ்வாயத்தம் ஒரு அவசியமான முக்கியமான செயற்பாடாகும்.

திருமண ஆயத்த வகுப்புக்களில் ஆன்மீக வாழ்வுடன் குடும்ப வாழ்வு எவ்வாறு மகிழ்வான, இணைந்த வாழ்வாக அமைய வேண்டும் என்பதும் அவற்றிற்குரிய வழிமுறைகளும் கற்றுக்கொடுக்கப்படுகின்றது. இந்த நவீன காலத்தில் வாழும் குடும்பங்கள் எத்தனையோ சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கின்றது. தங்கள் பொருளாதார நிலையை நிலைநாட்டவும், மேம்படுத்தவும் தம்பதியர் இருவரும் வேலைக்குச் செல்ல வேண்டியிருப்பதால் அவர்களது ஒருமித்த ஓய்வு வேளைகள், கூடி சல்லாபித்து மகிழும் நேரங்கள் அன்பை பரிமாறும் சந்தர்ப்பங்கள், கவலைகள், துயரங்களை பகிர்ந்து ஆலோசனை தேடும் வேளைகள், பெற்ற பிள்ளைகளுடன் செலவிடும் நேரங்கள், குடும்ப வேலைகளில் ஈடுபடும் நேரங்கள், இவை யாவும் ஒழுங்கில்லாது சிதறடிக்கப்படுகின்றன. இவற்றின் விளைவாக ஒருவர் ஒருவர் மீது சினம் கொள்வதும், ஐயுறவு ஏற்படுவதும், புரிந்துணர்வு இல்லாது விட்டுக்கொடுக்காது சண்டை சச்சரவு ஏற்படுவதும், குடி வெறி, தீய நாட்டங்களில் ஈடுபடுவதும், குழந்தை பெறுவது, வளர்ப்பதில் ஈடுபாடற்ற தன்மையும் ஏற்படுகின்றன. அன்பு, சகிப்பு, விட்டுக்கொடுத்தல், மன்னிப்பு, பகிர்தல், சேர்ந்து செபித்தல் போன்ற நற்பண்புகள் நாளுக்கு நாள் அருகி, ஈற்றில் முற்றாக அழிந்து, இயந்திர வாழ்கையாக குடும்ப வாழ்வு மாறுகின்றது. தங்கள் வாழ்வில் இறைவனுக்கு இடமில்லை இவர்களுக்கு உலகப்பற்று முக்கியமாய் இருப்பதால் தங்கள் பரம்பரை அந்தஸ்த்தை நிலைநாட்ட பெயரளவில் கத்தோலிக குடும்பங்களாக விளங்குகின்றனர். இறைவனுக்கு இரண்டாவது இடம் அளிக்கப்படுகின்றது. இதன் விளைவாக குடும்பங்கள் பிரிந்து விவாகரத்து ஏற்படுவதும், விபச்சாரத்தில் ஈடுபடுவதும் சாதாரணதொன்றாக கருதப்படுகின்றது. இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் என்ற இயேசுவின் வார்த்தையை இவர்கள் காற்றில் பறக்க விடுகின்றனர்.

இல்லற வாழ்விற்கு இலக்கணமாக விளங்குவது திருக்குடும்ப வாழ்வாகும். இறைச்சித்தத்தை ஏற்று மரியாளும் புனித சூசையப்பரும் திருமணத்தால் இணைந்து குடும்பவாழ்வில் ஈடுபட்டதை நாம் நற்செய்தியில் வாசிக்கின்றோம். தங்கள் குடும்ப வாழ்வில் எல்லா வேளைகளிலும் ஒருவர் ஒருவருக்கு துணையாகவும், புனிதத்துவத்தை காத்து இறை பற்றும், இறை நம்பிக்கை இழக்காது சவால்களை மேற்கொண்டு அவர்கள் இணைந்து செயல்படுவதையும் சோதனை, வேதனை வேளைகளில் இறை நம்பிக்கையுடன் நடந்ததையும் திருக்குடும்பத்தின் வாழ்வில் காண்கின்றோம். இறையன்பும், பிறரன்பும் அவர்களது செல்வங்களாக விளங்கின.

குடும்ப வாழ்வு ஒரு மலர் படுக்கையல்ல, பல இடர்கள், துன்பங்கள், வீழ்ச்சிகள், ஏமாற்றங்கள், கவலைகள், நோய் பிணிகள் போன்ற சோதனைகள் ஏற்படலாம். அத்தகைய வேளைகளில் கணவனும் மனைவியும் ஒருவருக் கொருவர் ஆறுதலாகவும், ஆலோசகராகவும், புரிந் துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, மன்னிப்பு போன்ற நற் பண்புகளைக் கடைப் பிடிப்பதாலும் குடும்ப வாழ்வு தெளிவான நீரோட்டம் போல் தொடரும்.



நாகரீக, நவீன, விஞ்ஞான வளர்ச்சியினால் மனிதரின் வாழ்வும், வாழ்க்கை முறைகளும் காலத்திற்கு காலம் ஏன் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கின்றது. திருமண அருட்ச்சாதனத்தால் இணைக்கப்பட்ட எமது குடும்பங்களை நாம் இத்தகைய சமூக அழிவுகளினால் சிதைக்கப்படாது இறைவனை மையமாகக் கொண்டு திருக்குடும்ப வாழ்வை முன்மாதிரியாக பின்பற்றி மன நிறைவான வாழ்வை வாழ சற்றே சிந்திப்போம்.

திருமதி. புஸ்பம் அந்தோனிப்பிள்ளை

# THE DATE OF CHRIST'S BIRTH




I have long heard that our modern date for Christmas, Dec. 25, was chosen in an effort to "Christianize" a pagan holiday. Needless to say, I was surprised to learn the true history of how this date was selected.

Though the gospels of Matthew and Luke both give an account of Christ's birth, neither one provides a date for this great event. Though it may sound strange to our modern minds, it is likely that early Christians did not place any particular value on birthdays. This makes it hard to conclude when Jesus was really born.

It was not until the third century that various pockets of Christians began to show interest in the date of Christ's birth, and it would take another century for the Church to begin celebrating it with some uniformity.

In regard to the chronology of Christ's life, Early Church leaders were primarily concerned with determining the date of his death in order to establish the celebration of his resurrection (Easter). Since the Bible places Christ's death at the time of the Jewish Passover, the dating should have been easy. However, reconciling the Jewish lunar calendar (which has 12 months of 30 days each and adds an extra "month" every third year) with Greek and Roman calendars proved to be difficult.

After much debate, the Eastern Church (which was using a Greek calendar) settled on April 6th, and the Western Church (which was using a Roman calendar) settled on March 25th as the date of Christ's death. As we know, with time, the Western date prevailed and helped to determine the Sunday on which to celebrate Easter.

Interestingly, according to the Roman calendar, March 25th was also the spring Equinox, a day that symbolized the "rebirth of the earth" and that some Christians believed marked the first day of creation.

Believers saw significance in the symbolism of Christ's death on the anniversary of creation, since it was Christ's redemptive death that allowed creation to be made new.

By the third century, it appears that some Christians had started celebrating Christ's birth, as well as his death, on March 25th, because in a book called *On Computing the Date of Easter;* the author makes a case against this day as Christ's birthday.

So why were Christians celebrating Christ's birth and death on the same day? Likely, an ancient Jewish tradition of "integral age" or "whole year theory" influenced this practice. It is a belief that the life of a Jewish prophet began and ended on the same day. A third century Christian, Sextus Julius Africanus, added an interesting component to this theory. He argued that Christ's life began not at birth but at conception. His case proves to be of particular relevance, because if Christ was conceived on March 25th, he would have been born 9 months later on December 25th, the date on which our discussion is focused.

Interestingly, the Church later recognized March 25th as the Annunciation (the date that Gabriel appeared to Mary to announce the birth of Christ and also believed to be the moment of conception (notice the pro-life implications) and December 25th as the birthday of Christ. Most Christians assume that the Annunciation was determined by taking the date of Christmas and counting back nine months. On the contrary, it was probably the reverse.

Though early Christian leaders made an effort to date Christ's birth with thoughtful consideration, bear in mind that Jesus was born in a period when time was referred to in terms of the "reign of so-and-so" and when both nature and symbolism played a role in dating significant events. St. Jerome (340-420 AD), an early church scholar, appealed to this symbolism to defend December 25 as the date of the Nativity: "Even nature is in agreement with our claim, for the whole world itself bears witness to our statement. Up to this day, darkness increases; from this day on, it decreases; light increases, darkness decreases."[1]

If the dating of Christmas was influenced at all by pagan celebrations, the most likely candidate was a holiday established in 274 AD by the Roman Emperor Aurelian (around 214-275 AD) called Dies Natalis Solis Invicti, "The Birth of the Unconquered Sun," on December 25. However, it is equally possible that Aurelian was attempting to co-opt a date that already had significance for believers. According to history professor William Tighe, "The date had no religious significance in the Roman pagan festal calendar before Aurelian's time, nor did the sun play a prominent role in Rome before him."[2]

By the time of Aurelian's reign, it appears that the god Mithras (originally a Persian deity who was said to be either the son of the sun or the companion of the sun) was earning popularity among traveling Roman soldiers. Aurelian decided to seize on an opportunity to bring a monotheistic cult to the Roman Empire, and it is likely that his motivation was to compete with Christianity – a growing monotheistic religion that he saw as a threat to the empire.[3]

The first clear record of Christ's birth on December 25 was not until 336 AD, but it is possible that the church had accepted the date long before and that it was already common knowledge. Regardless, even if the dating of Christ's birth was owed in part to the pagan holiday, "The Birthday of the Unconquered Sun," the influence was probably only secondary. It appears that the primary goal of the Church was to determine an appropriate date — one that Christians expected to be rich in symbolism. If this date, December 25, also happened to give the Church a sacred feast with which to counter pagan celebrations, then it was arguably the best possible choice for the day on which to honor Christ's birth.

*A Seeker*



# கிறிஸ்து பிறப்பதன் நோக்கம்

"ஒரு குழந்தை நமக்காகப் பிறந்துள்ளது. ஒரு ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளது." (ஏசாயா.9:6)

"தமது ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலையான வாழ்வைப் பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் இந்த உலகின் மீது அன்பு கூர்ந்தார்." (யோவான் 3:16)

இறைமகன் கிறிஸ்து மண்ணுலகில் பாவிகளை தீர்ப்பிட்டு அழிப்பதற்காக அல்ல அவர்களை பாவ நெறிகளில் இருந்து மீட்டெடுத்து அவர்களுக்கு வாழ்வு கொடுப்பதற்காகவே மானிட மகனாக அவதாரம் எடுத்து வந்தார். (லூக்கா.9:56) இந்த உலகில் எத்தனையோ அவதாரங்கள் வந்து போனதாக நாம் பல புத்தகங்களில் வாசித்துள்ளோம். ஆனால் வந்துள்ள அவதாரங்கள் எல்லாம் மக்களை மீட்பதற்காகவோ பாவத்திற்கான பரிகாரம் செய்ததாகவோ இல்லை. சமஸ்கிருத சுலோகத்தில் ஒருவசனமுண்டு. துஸ்ட நிக்கிரகம், சிஸ்டபரிபாலனம். இதன் அர்த்தம் என்னவெனில் துஸ்டர்களை அல்லது பாவிகளை அழித்து நல்லவர்களை காப்பாற்றுவதற்காகவே எல்லா அவதாரங்களும் இவ்வுலகிற்கு வந்ததாக வரலாற்று ஏடுகள் கூறுகின்றன. அதேவேளை பரிசுத்த வேதாகமம் தெளிவாகக்கூறுகிறது. பாவிகளை மீட்பதற்காகவே இறைமகன் கிறிஸ்து உலகத்தில் மனித அவதாரம் எடுத்தார். எனவும், பாவம் செய்தவர்களுடைய வாழ்வில் உண்மையான மனமாற்றத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு பரிவு இரக்கம் காட்டி மன்னிப்பு வழங்கி அவர்களும் பரலோகத்தில் நிலையான வாழ்வில் இன்புற்றிருக்க வேண்டுமென்பதே கருணை நிறைந்த இறைதந்தையின் அன்புத்திட்டமாகும்.

மனிதர்கள் அனைவருமே பாவிகள் உலகெமெல்லாம் பாவச் செயல்கள் நிரம்பி வழிகின்றது. அதேவேளை ஒருவர் நரகத்திற்கு போகவோ, கெட்டழிந்து வேதனைகளை அனுபவிக்கவோ, இறைவன் விரும்புபவர் அல்ல. அவரின் அளவு கடந்த பேரன்பின் நிமித்தம் உலகத்தில் பாவநாட்டங்களில் மூழ்கிகிடக்கின்ற மனித இனத்தை மீட்டெடுப்பதற்காக இறைவனே மனித அவதாரமெடுத்து வந்தார். போதனைகளோடு சாதனையாக பாடுகளை ஏற்று இரத்தம் சிந்தி தம்மையே தியாகப்பலியாக்கி பாவிகளாகிய நம்மை மீட்டெடுத்தார். என்பதை பரிசுத்த வேதாகமம் மிகத்துல்லியமாகத் தெளிவு படுத்திக் கூறுகின்றது.



நத்தார் செய்தி: இயேசு பிறந்துள்ளார். என்பது மட்டுமல்ல அவர் மரிப்பதற்கென்றே பிறந்தார். மரித்து உயிர்த்து மனிதம் இழந்து போன நித்திய வாழ்வை மீட்டுத்தந்தார் என்பது தான் உண்மையான அர்த்தமுள்ள நத்தார் கிறிஸ்து பிறப்பு விழாவின் செய்தியாகும்.

ஒரு கிறிஸ்தவர் அல்லாதா ஞானமுள்ள முனிவர் ஒருவர் இப்படியாகப் பாடுகின்றார் அகஸ்திய ஞானம், 30ம் அதிகாரம் 23ம் பாட்டில் “வணங்குவாய் ஜெகஜோதி ஒருவராகி மண்ணுலகை ஒரு நொடியில் வகுத்தே மண்ணில் குணமான மனிதரையும் படைத்த பின்பு குவலயத்தில் தான் உதித்து மனித வடிவில் அவதாரம் எடுத்து வந்த கனமான சம்சாரம் ஒன்றில்லாமல் சன்னியாசி போல் வாழ்ந்த காட்டி தனி முயற்சிகளினால் பரிவு இரக்கத்தினை மேற்கொண்டு

அன்பான சித்தர்கள் பன்னிருவரை பணியில் இருத்திவிட்டு அகன்ற தவம் சென்றவரை அண்டுவோமாக''

எனவே நாம் ஆழமாக உய்த்துணர்ந்து சிந்திக்க வேண்டிய விடயமெனில் இறைமகன் கிறிஸ்து தாம் இவ்வுலகத்திற்கு எதற்காக அனுப்பப்படுகின்றார் என்பதை அறிந்து கொண்டு தந்தையின் திட்டத்தை புரிந்து கொண்டு இவ்வுலகத்தில் தமக்கும் என்ன நடக்கும் என்பதையும் ஞானத்தில் தெரிந்து கொண்டும் தம்மை முழுவதுமாக இறைத் திட்டத்திற்காக அர்பணிப்பதற்காகவே இவ்வுலகில் மனித அவதாரம் எடுத்து வந்தாரே அல்லாமல் வந்த இடத்தில் சாவை சந்திக்கவில்லை. நம்மைப்போல் பிறந்த எவரும் இறந்து தான் ஆகவேண்டும் என்னும் நியதிப்படி அவர் இறக்கவும் இல்லை.

நாமும் கிறிஸ்தவர்கள் எனச் சொல்லிக்கொண்டு கிறிஸ்து பிறந்தார் என பாடிக்கொண்டு உண்மைக்கிறிஸ்தவர்களாக வாழ முயற்சிக்கின்றோமா?

இரக்கத்தின் ஆண்டில் பயணம் செய்து கொண்டு துன்பங்களில் துவண்டு கொண்டு இருப்போரில் கிறிஸ்துவை காண்கின்றோம் எனச் சொல்லிக்கொண்டு வசதியானவர்களோடு உறவுகளை வளர்த்து ஏனைய மனிதர்களை மிதிக்கின்றோம் அல்லவா?

உண்மைக்கு சான்று பகிர்வதே கிறிஸ்தவ வாழ்வு. அடுத்தவர்களின் வாழ்வுக்காக தம்முயிரைக் கொடுப்பது கிறிஸ்தவம் எனத் தெரிந்து கொண்டு, புரிந்து கொண்டு யாராவது முன்வந்தால் தேவையில்லாத வேலை அசட்டு துணிவு எனத் தீர்பிடுகின்றோம். அல்லா? உண்மையை எடுத்துரைப்பதே எனது பணி இதற்காகவே பிறந்தேன் இதற்காகவே இவ்வுலகத்திற்கு அவதாரம் எடுத்து வந்தேன். உண்மையைச் சார்ந்தவர்கள் எவரும் என் குரலுக்கு

செவிமடுக்கின்றார்கள் எனத் துணிந்து ஆளுனன் பிலாத்துவின் முன்பாக இயேசு கூறினார். (யோவான்: 18:37)

நாமோ இன்றைய அரச ஆளுனர்களிடம் நடைபெறுகின்ற உண்மைகளை எடுத்துக் கூறுவோமா? அல்லது மறைமுகமாக விருந்துபசாரம் வைத்து அனுப்புவோமா? சிந்திப்போம், செயற்படுவோம்.

கிறிஸ்து எமது உள்ளங்களில் பிறக்க வேண்டும். அதற்கான தகுதியினை நாம் தயாரிக்க வேண்டும். மாரியிலே மழைபொழிந்து மக்கள் இனம் வாழ்வதற்கு காரியம் போல் இறைதந்தை சரியான நேரத்தில் அனுப்புகிறார்.

நம்பிக்கை விசுவாசம் உம்மில் வைத்திருப்பவர் போல்
நம்பி உம்மை தொடர்வோர் நாளெல்லாம் பெருகுவரே
அழிவினை நீக்கி காக்க ஆண்டவர் மண்ணில் தோன்றி
இழிவினை எல்லாம் ஏற்க இணங்கிய மீட்பராகி
பழிவினை மக்களுக்கே படராமல் காத்து நிற்கும்
இழிவினை ஏற்றிப் போற்றும் எண்ணக்கரு எம்மில் வளர்வதாக.

ம.சூசைமுத்து



## Three things the Holy Family Can Teach



Advent is one of the favorite seasons of the year and it is a season that invites us to celebrate and remember the story of the Holy Family–Jesus, Mary and Joseph. We know this story by heart. However I invite to take a deeper look and to celebrate and remember the "Yeses" of the Holy Family.

There are 'three things' the Holy Family can teach us about our own 'Yes' to God.

1. The Holy Family actively participated in their response to God's invitation.

In Luke's Gospel we see Mary responding with both a verbal response," let it be to me according to your word," (1:38) and then living out her response through her actions of carrying and birthing her son. In Mathew's Gospel, we do not get to hear Joseph's response, but we read the line of scripture that He shows His response through action,' He did what the angel of the Lord had commanded him."(1:24) Jesus' 'Yes', we see happening throughout scripture as He grew into his ministry. All three members of the Holy Family actively participated in God's invitation to bring about God's kingdom through their words and actions. We too, are invited to actively participate in God's invitation to us. Is God inviting us to a verbal response and/or a response of actions right now?

2. The Holy Family's 'Yes' to God was not just one time, but an ongoing one.

We know from the experience of parents, that raising a child to be a co-creator in nurturing and parenting a child. Mary and Joseph did not just say 'Yes' once, but they continued their response to God's invitation to raise and nurture Jesus. Their response to God's invitation deepened

over and over again as he entered into His public ministry and later his passion, death and resurrection. Where and what way is God inviting us this Advent season to deepen our own 'Yes'.

3. The Holy Family rooted their lives in God.



Jesus, Mary and Joseph were able to say 'Yes' to God because they had a relationship with God. While we only get a short glimpse into Mary's and Joseph's relationship with God. I can only imagine that it must have been strong and continuously nurtured. How else do they say 'Yes' to both the birthing and the raising the Messiah? The Gospels offer us many examples of Jesus' turning to God the Father in prayer, to help him continue to say 'Yes' to his mission. Don't we think that we too need to nurture our own relationship with God in order to say 'Yes' to His continued invitation?

Let the story of the Holy Family's response deepen within us and help us say 'Yes' to God.

*Fr. James Mirusuvil*

# தூய திருமணம்

மழைநீர் ஆற்றில் விழுந்தால் அது ஆற்றுநீர் ஆகின்றது. கிணற்றில் விழந்தால் அது கிணற்றுநீர் ஆகின்றது. கடலில் விழுந்தால் அது கடல் நீர் ஆகின்றது.

கடவுளிடமிருந்து ஊற்றெடுக்கும் அருள் ஊற்று திருமண அருட்சாதனத்தால் இணைக்கப்படும் தம்பதியருள்ளும் பாய்தோடுகின்றது.

இவர்கள் தந்தை மகன் தூய ஆவியாரின் அன்புறவு ஒன்றிப்பின் வெளிப்பாடாக மிளிர்கின்றனர். நசரேத்தின் புனித குடும்பம் வாழ்ந்து காட்டிய அன்பு, நம்பிக்கை ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றும் உருவெடுக்கின்றது. வாழ்வு வரலாறு என்பவற்றின் நெளிவு சுழிவை நன்கு எதிர்கொள்ள ஆற்றல் அளிக்கிறது. குடும்பவாழ்வின் பொருளையும் உறவு ஒன்றிப்பையும், எளிமையையும் இயற்கைப் பண்புகளையும் இவர்கள் கற்றுத்தருகின்றார்கள்.

தூய திருமணம் பற்றி தொடக்கநூலில் இறைவன் கூறுகின்றார் "கணவன் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள்".

ஒன்றித்திருப்பதன் பொருள் என்ன? உடலும் உள்ளமும் மட்டுமல்ல கடவுளுடன் கொள்ளும் இணைப்பையும் காட்டுகிறது. பிள்ளைகளைப் பெற்று வளர்த்தெடுக்கும் பணியில் கடவுளின் படைப்புச் செயலில் பங்குபற்றும் மணமக்கள் அன்றாடம் இறைவேண்டலில் ஒன்றுசேரவும் கடவுளின் வார்த்தையை வாசிக்கவும் நற்கருணை விருந்தில் பங்கேற்கவும் அழைக்கப்படுகின்றனர். இவ்வாறு அன்பில் வளரவும் அதன் மூலம் தூய ஆவி உறையும் ஆலயமாகவும் அவர்களால் மாறமுடியும்.

ஒவ்வொரு குடும்பமும் கடவுள் செய்துள்ள அரும்பெரும் காரியங்களை தங்கள் உள்ளத்தில் வைத்து தங்கள் குடும்பங்களின் சவால்களை அன்னை மரியாவைப்போல வீரத்துடனும் அமைதியுடனும் எதிர்கொள்ள அழைக்கப்படுகின்றனர்.

“உங்கள் பிள்ளைகள் ஒலிவமரக் கன்றுகள் போன்றவர்கள்”

இல்லத்தில் உண்ணும் இடத்தில் செபிக்கும் இடத்தில் தாய் தந்தையருடன் ஒன்று கூடும் இடத்தில் அமர்ந்திருக்கும் பிள்ளைகள் உயிர்த்துடிப்பும் ஆற்றலும் நிறைந்தவர்களாக காணப்படுவர். பெற்றோர் இல்லத்தின் அடித்தளம் என்றால் பிள்ளைகள் உயிருள்ள கற்கள்.. ஆண்டவர் அருளும் பரிசில்கள். அவர் அளிக்கும் செல்வம். ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொண்ட மாபெரும் கொடை என்ற உணர்வோடு அவருக்குரியவர்களாக அவர்களை அறிவாற்றல் நற்பண்புகள் இறைபற்று மனித மாண்பு போன்ற சிறந்த குணங்களால் அவர்களை அலங்கரித்து வளர்த்தெடுப்பது தங்கள் பாரிய பணியெனக் கொள்வார்களாக.

ஒவ்வொரு குடும்பமும் புனித குடும்பமாக மாற வேண்டுமென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற நாமும் உழைப்போமாக.

அருட்சகோ. கெட்விச்



நம்முடன் வாழ்வோரை புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம்.

– புனித அன்னை தெரேசா

# Extinction and Endangered Species.

Species of animals are considered extinct when there are no more of them alive. Animals that are classified as

"end angered" are at risk of becoming extinct.



Over the course of history many species have become extinct. This is part of the natural process. However most natural extinctions are isolated events that happen over thousands or millions of years. Ever since human beings have been on earth, animal species have become extinct in a very short time and many more are added to the list every year.



**How do animals become extinct?**

- With more apart ments, houses, high ways and golf courses being built, humans are taking over more space. When forest is cut down and lakes are filled to create this space, entire species lose their homes. This means that there's nowhere for them to live, find food or feel safe.

- Many animals are also losing their homes due to land taken for agricultural purposes such as plantations in SriLanka, this is a major problem for elephants, and in countries such as Indonesia, the palm oil industry had taken away the homes of many orangutans.

- Climate change and environmental degradation are causing many animals to lose their homes and their lives. Humans-influenced issues such as oil spills, global warming and water pollution have been devastating for many animals from tiny bees to giant whales.

- Animals live in areas with very specific climate conditions that enable them to thrive. As the earth gets warmer, animals that need to live in cold places, like polar bears, might not have a suitable place to live anymore.

▪ Some animals are taken from the wild for human entertainment. They are sent to circuses, travelling shows and Zoos, leaving fewer animals in nature to carry on the species.

▪ Some people shoot tigers, lions and other animals for fun. This is called trophy hunting, and enough animals are killed this way. Some animals could become extinct.



▪ Animals such as bears are taken from the wild and used for sports such as bear - baiting and for their body parts or bile in traditional Chinese medicine, although it is not proven that this medicine is effective.



When animals are killed like this for parts it is called poaching. This is carried out in large numbers for exotic skins, ivory from elephant tusks and rhino horns to name a few. If we make a conscious decision never to buy products made from body parts of exotic species we can help end this problem.

▪ Plastic waste is also finding its way into the bodies and habitats of many animals including turtles, dolphins, whales and elephants. These animals mistake plastic for food and eat it, which causes illness and death.

Fortunately, now many laws are being enforced to help prevent the complete extinction of many species. As with any law, there are people who ignore these laws and will still kill animals and destroy our natural world. In order to best protect these animals, it is best to educate, create awareness and pledge to never have a part in these activities or encourage them.

The biggest thing we can do to help endangered animals is to take care of our world. May be tigers and polar bears don't live where you do, but animals like elephants and leopards do. They need our protection now, more than ever.



**Lover of Nature**

# திருக்குடும்ப வாழ்வின் அடையாளங்கள்

“மண வாழ்க்கை சார் உரிமைகளை ஒருவருக் கொருவர் மறுக்காதீர்”(1கொரி.7:15)

“திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள், மணவறைப் படுக்கை மாசுறாமல் இருக்கட்டும்” (எபி13:4)

“திருமணம் ஆண்டவர் தரும் ஓர் அருங்கொடை” (1கொரி7:7)

திருமணங்கள் பண்பாட்டில் முக்கிய அடையாளங்களாக மதித்து போற்றப்படுகிறது. இவை உலகில் ஆசிய பகுதியில் குறிப்பாக தமிழர் கலாச்சாரத்தில் முதலிடம் பெறுவது சிறப்பாகும். இதற்கு ஓர் உதாரணமாக எமது நாட்டிலுள்ள அறிஞர் ஒருவர் மேற்கு நாடுகளுக்கு சென்று ஆன்மீக கருத்தமர்வுகளை ஆற்றிவருபவர் தனது அனுபவத்தை எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

முக்கிய கருத்தமர்வு ஒரு வாரம் லண்டனில் இடம்பெற்றது. பிறநாட்டு நண்பர்கள் பயிற்சியில் கலந்து கொண்ட வேளை அவருக்கு ஓர் தொலைபேசி அழைப்பு வந்தது. மிக மகிழ்வுடன் கலந்துரையாடி நன்றி பகர்ந்தார். பயிற்சியாளர்கள் “மிகச்சந்தோசமான செய்தியா?” என வினவினார்.

“ஆம், ஆம் நான் இந்நாட்களில் வீட்டில் இருந்து தான் கொண்டாடுவேன். இவ்வாண்டு பிரிந்திருப்பது வீட்டாருக்கு மட்டுமல்ல, உறவினர், நண்பர்களுக்கும் மிகக்கவலை” என்றார். அப்படி என்ன சிறப்பு என்று கேட்டதற்கு இன்று எனது திருமண நாள் 35வது ஆண்டுகள் நிறைவினை நினைத்து வாழ்த்துக் கூறுகிறார்கள்” என்றார்.

“35ஆண்டுகளா?, அதுவும் ஒரு மனைவியுடனா?” என வியந்தனர். அத்தனைக்கும் காரணம் மேற்கத்தைய திருமண கலாசாரம் பலவழிகளில் சிதைவுற்ற ஒப்பந்தங்களாக திருச்சபை கூறும் ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிக்க தவறுவதால் திருமணத்தின் புனிதம், கணவன் மனைவி, பிள்ளைகள் இணைந்த திருக்குடும்ப வாழ்வு சிதைக்கப்பட்டு, தெருக்குடும்பங்களாக சிதைவுறும் நிலை; உலகமயமாக்கலில் பொருள், பணம், உழைப்பு, நாகரீகம் யாவும் ஆன்மீக பற்றுதிக்கு சவாலாக மாறுவது கண்டு வேதனையில், சிதறும் குடும்பங்களுக்கு திருத்தந்தை மிக அக்கறையுடன் விழிப்பூட்டும்

நற்கருத்துக்களை அன்பின் மகிழ்ச்சி'' எனும் திருத்தூது ஊக்கவுரை மூலம் தந்துள்ளார்.

திருத்தந்தை திருமடலில், மாறிவரும் உலகில் திருமண பந்தத்தில் இளையோர், வாழும் குடும்பத்தினரின் முன்மாதிரிகை எதிர்கால சந்ததிக்கு அடித்தளமிடும் பொறுப்புள்ளவராக வாழ அழைப்பு விடுக்கின்றார்.

திருமணச் சிதைவுகள் பலவழிகளால் சிதைவுற போரும், இடப்பெயர்வும், வெளிநாட்டு வாழ்க்கை முறைகளும் காரணமாயின. பெற்றோரின் பொறுப்பிழந்த வழிகாட்டலும், திருமண பந்தத்தை தெளிவுபடுத்தி வழிகாட்ட தவறும் சடங்குகளும், கொண்டாட்டங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம், ஆன்மீகத்தை மதிக்கத்தவறும் சந்தர்ப்பங்களும் காரணமாக உள்ளதை பல ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்படுவது வேதனைக்குரியதாகும்.

''இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்'' என வேதம் சொல்கிறது. திருச்சபை முன்னிலையில் வாக்குறுதி அளிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளும் பொறுப்புள்ள அருட்கொடையான திருமணம் இருசாராருக்கும் பொருத்தமானதே. சில சமயங்களில் எமது எதிர்பார்ப்புக்கள் பலவாக இருக்கலாம். அவை நிறைவாக கிடைக்கவில்லை என சாட்டுக்கூறாது, இருப்பதை சிறப்புடன் ஏற்கும் முன் மாதிரிகளே சிறந்த முன்மாதிரியான திருக்குடும்பமாக திகழ்கிறது.

கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உண்மையான அன்பு என்பது இறைதிட்டத்திற்கு ஏற்ற பாலியல்பு, உணர்ச்சி என்னும் பரிமாணங்களை உள்ளடக்கியதும் ஒருங்கிணைப்பதுமான ஒருவர் ஒருவருக்கு செய்யும் தற்கையளிப்பை கொண்டது (காண்.48-49) கிறிஸ்து ஆண்டவர் திருமணம் எனும் அடையாளத்தின் வழியாக கிறிஸ்தவ மணமக்களை சந்திக்கின்றார். அவர்களுடன் உடனிருக்கவும் செய்கிறார்.

## இன்றைய கால சவால்கள்

போரால் துணையிழந்தவர்கள், பிரிந்து வாழ்பவர்கள், பிறநாடு சென்று பிரிவுற்று இருப்பவர்கள், இருதாரமணம் புரிபவர்கள், கைவிடப்பட்டவர்கள், இளமையில் ஏமாற்றப்பட்டு மறுமணத்தில்

தள்ளப்பட்டவர்கள், திருமணத்தின் புனிதம் காண்பதில் சவால்களை எதிர்நோக்குபவராக காணப்படுகின்றனர்.

மாயைக் கவர்ச்சியில் மயங்கி பிறதார மறுமணங்கள் குடும்ப ஆன்மீக சிதைவுக்கும் காரணமாகின்றது. எதிர்கால சந்ததிக்கும் வடுக்களை விளைவிக்கின்றது. எந்த நிலையிலும் குடும்பத்தில் கணவன் மனைவியின் மனத்தூய்மையான நல்லுறவை வலுப்படுத்த திருமண முன்னாயத்தமும், காலத்திற்கு ஏற்ப புதுப்பித்தலால் குடும்பத்தில் நல்ல செயல்களை பாராட்டி ஊக்கப்படுத்தும் குடும்ப உறுப்பினர்கள் கூடி செபித்தலும் ஒன்றாய் பகிரும் சந்தர்ப்பங்களும் அதிகரிப்பதில் அக்கறை காட்டுவதற்கு சந்தர்ப்பங்களை அதிகமாக்குதல் காலத்தின் தேவையாகும்.

எமது குடும்பம் திருப்தியானது, நிறைவான உறவில் வளர்க்கப்படுகிறது என திருப்தி கொள்வோர் தமது அயலவர் மட்டிலும் அக்கறை உடையவர்களாக இருக்க வேண்டும். தவறான வழிகளில் நடப்போரை ஒன்றிணைப்பது இறை விசுவாசத்தில் மனச்சாட்சியுடன் ஒன்றித்து வாழ அர்ப்பணித்து உழைக்கும் மனப்பாங்கு புதிய வாழ்வுக்கு வழிகாட்டும். இறை பிரசன்னத்தின் தூதுவராக சிறு சிறு செயல்களால் மகிழ்வான குடும்பங்களில் அன்பின் மகிழ்வை சுவைக்கும் குடும்பங்களாக, ஆன்மீக வழிகாட்டலை மேம்படுத்துதல் எம் ஒவ்வொருவரது வழிபாட்டை வாழ்வாக்கும் உன்னத செயலாகும்.

செ.யோசப்பாலா



A tree is known by its fruit; a man by his deeds. A good deed is never lost; he who sows courtesy reaps friendship, and he who plants kindness gathers love

*St. Basil*

# விடிவெள்ளியின் உதயம் பாரினிலே

வாழ முன் வரலாறு வகுத்தவர் இயேசு, அவரது வருகை எத்தனையோ தீர்க்கதரிசிகள் மூலம் முன்னறிவிக்கப்பட்டது. தந்தையான இறைவன் தவிக்கும் மனுக்குலத்தை தன் மகன் மூலம் பூரணப்படுத்த, எண்ணம் கொண்டார். அந்த எண்ணத்தின் நிறைவு தான் யேசுவின் பிறப்பு. பல காலமாக காத்துக்கிடந்த நமது முன்னோர்கள் கண்டு கொண்ட வான் விடியல், அவரது பிறப்பானது வரலாற்றின் ஒரு திருப்பு முனையாகும். சரித்திரத்தின் பொன்னான நாள் உலகத்தையே புரட்டி உருட்டிய நன்நாள். ஏன் பிரபஞ்சமே அவரை வரவேற்று அவரோடு ஒண்றிணைந்த பொன்னாள்.

நிம்மதியற்ற இவ்வுலகிலே நிம்மதிக்காக ஏங்கித்தவித்த வேளையிலே மனித குலத்திற்கு அமைதியின் தூதனாக இயேசு உதயமானார். வல்லமையுள்ள இறைவன், வாக்கு மாறாதவர், முடிவில்லா தந்தை, அனைத்திற்கும் மேலானவர், அமைதியின் அரசர், புதிய விடிவெள்ளியாக வாழ்வளிக்க வந்தவர், வார்த்தையால் மனுவுருவானார். இயேசு மனித மாண்பை நிலை நாட்டவும், உண்மையை எடுத்துரைக்கவும், உள்ளங்களைப் புனிதப்படுதவும், தவறுகளைத் திருத்தவும், நேர்மையை நிலைநாட்டவும் இப்பாரினில் அவதரிக்கச் சித்தங்கொண்டார். இதற்காகவே அடிமையின் தன்மை பூண்டார். மண்ணகத்தின் மீது அவர் கொண்டிருந்த தணியாத அன்பின் வெளிப்பாடுதான் அவரின் பிறப்பு. இந்த ஆழமான அன்பை வழங்க வந்த நிகழ்வே இயேசு பிறப்பு விழா. இது சமத்துவத்தின் விழா, பகிரும் பாசறையின் விழா, உள்ளதை இல்லாத ஏழை எளியவர்களோடும், அயலவரோடும் பகிரும் விழா, உடைந்து போன உறவுகளை ஒட்டவைக்கும் விழா, உள்ளத்திலும், இல்லத்திலும் குதூகலத்தையும் மகிழ்ச்சியையும் உருவாக்கும் விழா. இவை அனைத்திலும் நிறைவு காண்பதற்கே இயேசு மனிதனானர்.

பரலோக இயேசுவின் பிறப்பு விழாவானது வாழ, அழைப்பையும் தருகிறது. இயேசு நம் மனங்களில் உருவெடுக்க வேண்டும். இறை மனித பிறப்பது நம்மையும், நல்ல மனிதர்களாக, மாற வேண்டும் என்ற நோக்கத்தை ஆழமாகவும் அழுத்தமாகவும் வாழ அழைப்பை

விடுக்கின்றது. இரக்கம், கருணை, அன்பு, பகிர்வு கொண்ட மனிதர்களாக பிறரின் உணர்வுகளை புரிந்து செயல்படும் மக்களாக வாழ நம்மைத் தூண்டுகின்றது. எனவே பரலோக இயேசுவின் அழைப்பிற்கு உன்னிப்பாக செவிசாய்ப்போமாக.

எம் சகோதர, சகோதரிகளை குறைபாடுகளோடும், நிறைகளோடும் அப்படியே ஏற்போமா? பிறப்பு உண்மையில் எழுச்சி மிக்கதாய், பொருளுள்ளதாய் இருக்க வேண்டுமானால் நமது வாழ்வும் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறித்ததாக அமையவேண்டும். “நான் உன்னுடன் இருக்கின்றேன்” “நான் உன்னை அன்பு செய்கின்றேன்” “என்னை நம்பலாம்” என்பவற்றை எமது வாழ்கையின் அனுபவமாக மாற்றுவோம். விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும். ஆண்டவரின் மாட்சி உனக்கு முன்சென்று உன்னைக்காக்கும் (எசா 58:8) என்னும், புதிய ஆண்டின் வாக்குறுதியை நம் எல்லோருக்குமே கொடுத்துள்ளார். எனவே பழையன கழிந்து புதியன தோன்றட்டும். நலமான வாழ்வு துளிர்த்து விட்டது என்ற நேர் மனப்பக்குவத்தில் வாழ்வோம். ஆண்டவரின் மாட்சிமை எங்களோடு இருந்து ஆண்டு முழுவதும் காத்தது இனியும் காக்கும் என்னும் விசுவாசத்தோடு நாம் ஒருவருக்கொருவர் அன்பிலும், சமாதானத்திலும், பகிர்தலிலும், கிறிஸ்துவைப் போல் வாழ்ந்து செபத்திலும், நற்செய்தி காட்டும் வாழ்விலும் இறையரசைக்கட்டி எழுப்புவோம்.

அருட்சகோ. மாசில்லா
தாண்டவன் வெளி



மலை புயலுக்கு அசைந்து கொடுப்பதில்லை.
அறிவாளி புகழ்ச்சிக்கு அடிமையாவதில்லை
– புத்த பெருமான்

# G R A T I T U D E

## "WE RECEIVE EVERYTHING WITH GRATITUDE"

## Art.. 102

In one of my personal reflections, one day, I was touched by this phrase in Art. 102 of our Constitutions. " Receive everything with gratitude". The word 'EVERYTHING" forcefully pressed me and I felt challenged. I started further reflecting on it, in the light of the life of Jesus.

Jesus' whole life here on earth was a constant raising of His whole being to the Father, in gratitude. Was His life a "Bed of Roses" ? Was His gratitude and joy overflowed from his heart because of the so called 'good things' He received? Let's journey with Jesus and delve into his attitude of gratitude in 'Everything'.

♦ Jesus was acknowledged as the Beloved Son of God.

HE GAVE THANKS ! (Mt. 3:17; 17:5)

♦ Jesus was admired by the Pharisees and elders in the temple.

HE GAVE THANKS ! (Lk.2: 47; 20:39-40)

♦ Jesus was criticized by the same Pharisees.
(Lk.20:19-

HE GAVE THANKS ! ( Mt.16:16 ; 14:33)

♦ Jesus' Father revealed his identity to Peter and to the other apostles.

HE GAVE THANKS ! (Jn. 21:20)

♦ Jesus was loved by the poor, the sick, the sinners, the women and the beloved apostle John.

HE GAVE THANKS ! (Mt. 14:20)

♦ Jesus fed thousands of people who followed to hear His word, and did many signs and wonders.

HE GAVE THANKS !

♦ Jesus knew that Judas was planning to betray Him; His heart pained, yet,

HE GAVE THANKS ! (Lk.22:3-6 ; Mt. 26:25)

♦ Jesus was recognized by the Samaritan woman and through her, many Samaritans.

HE GAVE THANKS ! (Jn. 4:29; 4: 42)

♦ Jesus had nowhere to lay his head. He publicly acknowledged this and

HE GAVE THANKS !

(Mt. 8: 20)

♦ Jesus' chosen apostles could not understand his true message, his pain and anguish at the thought of an impending ignominious death at the end of his earthly life.

HE GAVE THANKS !

(Lk.9:22; 22:36-46 Mt. 26: 1-2)

Jesus' secret was, HIS CONSTANT GAZE fixed on God - His Father – the Source of all goodness. One in mind and heart with the

Father's vision and mission

HE GAVE THANKS FOR EVERYTHING.

Jesus' life motivates and energizes us for the year 2017.

Let's welcome the new year in gratitude to the Providence of God and thank God for all that will be poured in our sack, good measure, pressed down full and running over. (Lk, 6: 38)

Let's HAVE A CHRIST CONSCIOUS

NEW LIFE IN THE NEW YEAR !!!

*Sr. Romuald*

# மரியின் மழலையே வாராய்

உறைந்து போன உண்மைகளுக்கு உருக்கொடுத்த
மறைந்து போன மதங்கள் மறுமலர்ச்சி காண
சிதைந்து போன சிந்தனைகளைச் சீராக்க
சிம்மாசனத்தை வெறுத்து சிறிய குடிலில் மனுவானார்.

மழலைகளில் இனிமையாய் கலந்திடவும்
இளைஞர்களின் முழுமையில் மலர்ந்திடவும்
முதியவர்களின் தனிமையில் பகிர்ந்திடவும்
இறையே எம் உணர்வுகளில் இதமாக இணைந்திட்டார்.

கொந்தளிக்கும் இயற்கையினை இதமாக்கவும்
நவநாகரிகம் என்னும் பாவங்கள் பரிசுத்தமாக
பாரிலுள்ளோரின் பாதகங்கள் புதுப்பார்வை பெற்றிட
பாராளும் பரமசுதன் பிரசவமானார்.

அநியாயமான கொலைகளுக்கு அன்புச் சுடராக
அகதியானவர்களுக்கு அடைக்கலமாக
அடிமைத்தனங்களுக்கு விடுதலையாக
அவனிதனில் அவதாரமானார் எம் ஆண்டவர்.

வளமையின் நிறைவாக வறுமைக்கு விடியலாக
விந்தையான போக்குகளை விரட்டும் ஒளியாக
விரக்தியின் விளிம்புகளைத் துடைத்திடவே
விண்ணில் இருந்து மண்ணகம் இறங்கி வந்தார்.

*Sr. Amali*

# The stepping stones

Sometimes we fail in certain things in life. We make mistakes, take wrong decisions, sometimes we try and fail and sometimes we get caught in other people' s traps. Doors get slammed in our faces, and a sense of frustration and bitter- ness may creep in.

Failure is painful and at times it's too much of bitter pill. Our defense mechanisms start to fall off and discouragement overwhelms us. Sometimes because of our failures we stop our progress in life, limit our potential and miss many great opportunities of success.

However, it is important to learn that we are human beings and it is impossible to go through life without experiencing some kind of failure.

So, despite our failures we have got to move forward.

Have you ever noticed that failure has a tremendous positive power and that it is a blessing in disguise?

It's true it's fact. Failures lead to success if you have the courage and determination to start all over again, without counting the cost and with-out lamenting the loss.

Truly if you have learned some lesson and gained some experience then you cannot say you failed. You have gained a treasure. The real mistake is the one from which we do not learn a lesson. Failure can teach us things about ourselves that we would never have learned otherwise.

Throughout history brilliant minds have said things like "Never, never, never give up." Ever keep on moving despite recurrent failures.

History abounds with great people who refused to stop in front of failures and went ahead with unflinching courage till they reached the apex of success.

Michael Jordan is one of the greatest basketball players of all time. And yet, he was cut from his high school basketball team because his coach didn't think he had enough skill.

Warren Buffet, one of the world's richest and most successful businessmen, was rejected by Harvard University.

Richard Branson, owner of the Virgin Empire, was a high school dropout. There are many more. They never stopped but marched forward. They proved that failures can immobilize weak people but reinforce strong people.

Thomas Edison was a man of unbelievable perseverance.it took him 1,000 tries before he succeeded in inventing the light bulb.

"How did it feel to fail 1,000 times?'' a re- porter asked.

"I didn't fail 1,000 times.' Edison responded. "The light bulb was an invention with 1,000 steps"

Remember, true success in not "not failing" it's getting up after each fall.

Babies are the best examples. They how to stand up by learning how to fall down. They fall down thousands of times, but somehow they get up, till they can stand. And… run… and run…. And become champions….

This is the spirit we all must cultivate.
A failure is not the end of the world

Failures do not mean that we are inadequate. Our failures can be the stepping stones of our success. Believe it and prove it to yourself.

# இல்லற வாழ்வின் இன்பங்களும் இன்னல்களும்

"திருமுழுக்கு பெற்ற அனைவருமே புனித வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்." "உங்கள் வானகத் தந்தை இரக்க முள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்க முள்ளவராய் இருங்கள்"(மத்:5:58)

## "இல்லறம் என்பது நல்லறமாக பௌர்ணமிக்கவேண்டும்"

இல்லறம் என்பது இரு வீடுகள் பற்றிய இயேசுவின் விளக்க உரையில் குறிப்பிடுவது போல ஒன்று கற்பாறையின் மீதும், மற்றொன்று மணல் மீதும் கட்டப் படுகின்ற வீடுகள் ஆகும். விளக்கவுரையின் பெறு பேறுகளாக ஒவ்வொரு குடும்பங்களின் உறுப்பி னர்களுடைய தன்னுரிமை செயற்பாடுகளால் உரு வாகும் பல்வேறு செயல் வடிவச் சூழ்நிலைகளை அடையாளப்படுத்துகின்றது.



ஒவ்வொரு குடும்பமும் ஒரு விளக்குதண்டாகவும், ஒளியாகவும் மிளிரலாம், வழிதவறி அழிவாகியும் போகலாம்.

## "குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை"

இறைவன் தம் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கை இல்லற வாழ்வாகும் .இங்கு மனிதம் மலர்கிறது.. மாண்புகள் மணம் பரப்பி உறவுகள் உதயமாகின்றது. பாசங்கள் பௌர்ணமிக்கின்றன. மழலைச் செல்வங்கள் நம்பிக்கைளில் மலரும் புனிதம் மிகு ஆலயமாகின்றது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நம்பிக்கையின் முதல் ஆசான்களாகவும் இருக்கின்றார்கள். மேலும் நல்ல விசுவாச வித்துக்களை உதயமாக்கும் விளை நிலங்களாகிறது. துறவறப்பயிர்களை உற்பத்தி செய்து நாட்டிற்கும் திருச்சபைக்கும் நன்மை பயக்கும் வகையில் அகிலமெங்கும் அல்லலுறும்

ஆன்மாக்களை ஆண்டவர் பால் ஆதாயமாக்கும் அர்ப்பணப் பணியாளர்களை உருவாக்கும் உன்னத பாசறையாகவும் திகழ்கின்றது.

## "இல்லறம், பொது நிலையினரின் பணித்தளமாகின்றது."

இல்லறத்தில் இருந்தே இறைவனின் படைப்புத் திட்டம் உருப் பெறுகின்றது. "திருக்குடும்பத்தை முன்மாதிரியாகக் கொண்டு அன்பு, பண்பு, புரிந்துணர்வு, நீடிய பொறுமை ஆகிய விவிலிய விழுமியங்களை அணிகலனாகக் கொண்டு, குடும்ப வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் மேலோங்கவும், அயலவரோடும் ஏனைய சமூகங்களோடும் ஒப்புரவாகவும் அழைக்கப்படுகின்றோம். உதவி தேவைப்படுவோர், வறுமையில் வாடுவோர், துன்பங்களில் துயறுவோர், முதுமையில் தளர்வுற்றோர், விசுவாச நெறியில் பிறழ்வுடையோர் ஆகிய பாச உறவுகளுக்கு ஆறுதல் கூறி, அன்புக் கரம் நீட்டி பிறரன்புப் பணிகள் செய்து, உப்பாக, ஒளியாக, புளிக்காரமாக ஆக்கமும் ஊக்கமும் நிறைந்த பொது நிலையினராக செயற்படுவதோடு தினமும் வேதாகமத்தை வாசித்து, தியானித்து அன்பிய வழிபாடுகளை அயலவர்களோடு இணைந்து நடாத்தி, ஆன்மீக வாழ்வில் ஊட்டம் பெற்று, சமூக நலனில் நாட்டம் கொண்டு எல்லாருக்கும் எல்லாமாக வாழ்ந்து இன்பங்களை அனுபவிக்க வாய்ப்புக்கள் ஏற்படுகிறது.

## "இல்லற வாழ்வில் இன்னல்கள்"

கிறிஸ்தவ வாழ்வு பஞ்சு மெத்தையான வாழ்வு அல்ல. பனிப் பாறையான வாழ்வாகும். இல்லற வாழ்வில் துன்பங்கள் சிலுவையாக காட்சியளிக்கலாம். ஆனால் சுமந்து தான் ஆக வேண்டும். சிலுவை மீட்பின் சின்னம். அரவணைத்து ஏற்கவேண்டும். "துன்பம் வரும் வேளையிலும் சிரியுங்க "என்று சொல்லி வைத்தார் வள்ளுவனார்., சிரியுங்க..... இல்லறவாழ்வில் இன்னல்கள் பல வடிவங்களில் தோற்றம் பெறுகின்றன. கணவன், மனைவியிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்காமை, நீடிய பொறுமை இல்லாமையினால் சந்தேகக்கேடு, அடுத்தவர்களின் தலையீடுகள், தொலைத் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றால் இன்னல்கள் ஏற்படுகின்றன.

அடுத்து வாழ்வாதாரப் பிரச்சனைகள் தொழில் வாய்ப்புகள் இல்லாமை அத்தியாவசிய செலவுகளை ஈடு செய்ய முடியாமை பிள்ளைகளை வளர்ப்பதில் கல்வி கற்பிப்பதில் இயலாத நிலைமை. உணவு, உடை, உறைவிடம் நிறைவில்லாமை காரணங்கள் ஆகலாம். உதராணமாக திருக்குடும்பத்தை அவதானித்து புரிந்து கொள்ளாலாம், செய்யக் கூடிய தொழிலை செய்து அதன் வருமானத்தில் நிறைவுகண்டு இருப்பதை கொண்டு திருப்தியாக வாழ முயற்சிப்பது தான் சிறந்த வழியாகும். இல்லறத்தில் சோம்பல் எனும் சாத்தானுக்கு இடம் கொடுக்காமை அடுத்தவர் வாழ்வைக் கண்டு பொறாமைப்படுதல் தவிர்க் கப்படல் வேண்டும். திட்ட மிடாமல் வாழ முயற்சிக்க கூடாது. முயன்றால் முடி யாதது எதுவுமில்லை. வறுமை நிலைக்கு பயந்து விடாதே அதிலும் திறமை இருக்கு மறந்து விடாதே. குடும்பம் ஒரு கதம்பம் முது மொழியாகும். அவசிய தேவையாக, திட்டமிடல் விடாமுயற்சி அன்புப் பரிமாற்றம் காலை மாலை குடும்பமாக இணைந்து செபித்தல் இவற்றைக் கடைப்பிடித்தால் இன்னல்கள் யாவும் இடம் தெரியாமல் மறைந்து விடும்..... சிந்தனைக்கு விருந்தாக அத்தனை பேரையும் நேசி, இதில் ஆண்டவர் பற்றி யோசி, இறைவார்த்தையை தினம் வாசி.



ம. சூசைமுத்து

# விளக்கேற்றும் விடிவெள்ளி

வெண்பனி தூவிய மணற்பரப்பில்
வெண்நிலாவின் ஒளிப்பிளம்பில்
விடி வெள்ளியாய் வந்துதித்த
விடியலின் வேந்தன்
விடிகாலைப் பொழுதில்
விளக்கேற்ற உனக்காக பிறந்துள்ளார்.

வேட்டுக்கள் ஓய்ந்து வோட்டுக்கள் கேட்கும் காலம்
வேதனைகள் பெருகி சோதனைகள் வாட்டும் காலம்
வேதனைகள் அதிகரித்து பட்டினியில் நனையும் காலம்
வேதத்தின் வேந்தன் வேதனையில் வாடும் உன்னைத் தூக்கி விட
விடியகாலைப் பொழுதில் உனக்காக பிறந்துள்ளார்.

ஓடும் கடிகாரம் போல் உருண்டோடும் உலகத்தில்
ஓடுகின்ற வாகனங்கள் உயிர்களை அளிக்கின்ற காலத்தில்
ஓடியும் ஒழிந்தும் கஞ்சாவின் ஆட்சியில்
ஒடுக்குகின்ற அநீதிகளை அழிக்க
விடிகாலைப் பொழுதில் வேந்தன் உனக்காகப் பிறந்துள்ளார்.

உண்மைகள் உருக்குலைந்து உறங்கிவிட்ட காலத்தில்
உத்தமர்கள் சீர்குலைந்து சீரழியும் காலத்தில்
உற்றவரும் பெற்றவரும் நாகரிக மோகத்தில்
நனைந்து விட்ட காலத்தில்
உடலுக்கு உரம் கொடுத்தோர் முதியோர் இல்லத்தில்
முடங்கி இருக்கும் காலத்தில்
உண்மைகள் உறைக்கும் என்று நினைக்கும் மானிடமே
உள்ளத்தில் ஒளியேற்ற
விடிகாலைப் பொழுதில் வேந்தன் யேசு உனக்காகப்
பிறந்துள்ளார்.

அருட்சகோ. எலிசபெத்

# இனிய தேவனுக்கு இதய தாலாட்டு

ஈராயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
ஈசன் யேசுவின் மனு அவதாரம்
ஈர்நான்கு திசைகளிலும் கொண்டாடி
ஈதல் பண்டிகையை அமைத்திடுவோம்
ஆராரோ ஆரிரரோ ஆராரோ

மாமரி அன்னை மடிதனில் மாபரா யேசு துயில் கொள்ள
மாசு மறுவற்ற உள்ளத்துடன்
மாந்தர் நாம் போற்றிடுவோம்
ஆராரோ ஆரிரரோ ஆராரோ



பாலக யேசுவின் பரந்த மனம்
பாரினில் பாரிய பண்புகள் பரவிட
பாருள்ளோர் அனைவரும் பாங்குடன் ஏற்றி
பாவ மாசகற்றி பாரினில் வாழ்வோம்
ஆராரோ ஆரிரரோ ஆராரோ

கடவுளின் மகனின் கண்ணியப் போக்கு
கயவர் காமுகர் காரிருள் போக்கி
கடையர் காடையர் கர்வம் நீக்கி
காத்திடுவாய் கண்மணியே
ஆராரோ ஆரிரரோ ஆராரோ

உள்ளதைப் பகிர்ந்து வாழ
உள்ளத்தில் நல்ல விதை விதைத்து
உத்தமராய் வாழ மனதில்
உறுதி தா மாபரனே
ஆராரோ ஆரிரரோ ஆராரோ
சின்னஞ் சிறு திருமகனே

சிறார்கள் மனதில் குடி கொண்டு
செப தப தானம் தர்மம் செய்ய
செவ்வனவே நடத்திடுவாய் திருமகனே
ஆராரோ ஆரிரரோ ஆராரோ

செல்வன் சந்தோஸ் ஜெறோம்
தி.கு மாணவன்
பண்டத்தரிப்பு

## கிறிஸ்தவ மதத்தை காட்சிப் பொருளாக மாற்றும் சோதனையை..

கிறிஸ்தவ மதத்தை கண்ணைப்பறிக்கும் காட்சிப்பொருளாக மாற்றும் சோதனையை நாம் வெல்லவேண்டும் என்று திருத்தந்தை பிரான்ஸ் அவர்கள் மறையுரை வழங்கினார்.

“இறையாட்சி உங்கள் நடுவிலேயே செயல்படுகிறது” என்று இயேசு பரிசேயரிடம் கூறிய சொற்களை மையப்படுத்தி தன் மறையுரையை வழங்கிய திருத்தந்தை இறையாட்சி நம் ஒவ்வொருநாள் வாழ்விலும் வளரவேண்டிய உண்மையே தவிர பலரையும் கவர்ந்திழுக்கும் காட்சிப்பொருள் அல்ல என்று தெளிவுபடுத்தினார்.

புதிது புதிதாக செய்திகளையும், செயல்பாடுகளையும் அளிப்பதற்கு முயற்சிகள் செய்வது நமது மத நம்பிக்கை அல்ல, மாறாக இறைமகன் இயேசுவில் முழுமையாக வெளிப்பட்ட இறைவார்த்தையை இவ்வுலகிற்கு உணர்த்துவதே உண்மையான கிறிஸ்தவ மதம் என்று திருத்தந்தை தன் மறையுரையில் வலியுறுத்தினார்.

வீட்டில் ஏற்றப்படும் ஒளி விளக்காகவும், அப்பம் சுடுவதற்கு தயார் செய்யப்படும் மாவில் வைக்கப்படும் புளிப்புமாவாகவும் இருப்பதே உண்மையான இறையாட்சி என்றும் அது நிமிடத்தில் தோன்றி மறையும் வாணவேடிக்கை அல்ல என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எடுத்துரைத்தார்.

இறையாட்சியின் வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது நமது பொறுமையும் கடின உழைப்பும் என்று கூறிய திருத்தந்தை நம் உள்ளத்தில் விதைக்கப்பட்ட இறைவார்த்தை என்ற விதையை பொறுமையாய் பேணி வளர்க்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்று கூறினார்.

# I saw a Star



I saw a star on Christmas night.
It did not move; it was not bright.
It seemed lonely, dim and far-
That distant, disenchanted Star.

I saw a child on Christmas night.
His clothes were torn; his eyes were bright-
But not with laughter- only tears;
Pain embraced that child –and tears.



I saw some light on Christmas night-
Some yellow orange, and some white.
But they were not the signs of fun-
Exploding bomb and firing gun-

O Lord, to what has your world comes,
From a pleasant garden to a gloomy tomb!
Please but a smile on the face of the boy;
Bring back you peace and light and joy.



No, "I cannot", Said the Lord
"Once before I gave the word.
It is your world; you know it well;
You can make it heaven or hell".

So let us work with heart and hand,
Make our smile a magic want.
Drive out hatred, anger, Fear,
Clean our Polluted atmosphere.

*Sr. Joiline*

# மனித நேயமுடன் அவதரித்தார் இயேசு

"**நாம் அனைவரும் இரக்கத்தான் பிறந்தோம் இறக்கும் வரை இரக்கத்தோடு வாழ்வோம்**" என்ற புனித அன்னை திரேசாவின் பொன் மொழிகள்; மனிதனாக அவதரித்த எம் பெருமான் இயேசுவின் வாழ்வைச் சுவைத்து அனுபவித்த நிறைவின் வெளிப்பாடுகள்.

மகிழ்வான, நிறைவான, வாழ்வினை அனுபவிக்கத் தேவைப்படுவது திறன்களே. சமூக இணைவுடன் கூடிய வாழ்வும், இயற்கையுடன் ஒன்றித்த வாழ்க்கைப் பயணமுமான இத்திறன்கள், இவ் வையகத்தில் மனிதனை மேம்படுத்தும் மகிழ்ச்சிப்படுத்தும், நலமுடன் வாழ வழி சமைக்கும், என்ற உயரிய நோக்குடன் varod நிறுவனத்திலே திருக்குடும்ப சகோதரிகளாகிய நாம் சமூகம் சார் மனிதநேயப் பண்புகளை மகிழ்வுடன் செயற்படுத்தி வாழ்ந்து வருகின்றோம். நிறை வாழ்வை கொடுக்க வந்த இறைமகன் இயேசுவின் பொன் மொழிகள் எம் வாழ்க்கை பயணத்திலே எம் பயனாளிகளுடன் பாசத்தை பக்குவமாகப் பகிரவும், நாளந்தம் பயணிக்கும் எம் தொடர் பயணத்தில் வார்த்தை மனுவுரு எடுத்த எம் இயேசுவின் மனநிலைகள் எண்ணங்கள், உற்று நோக்கும் பார்வைகள் சவால்கள் மட்டில் எதிர் கொள்ளும் மனவுறுதி நிறை மகிழ்வுக்குள் மாற்று வலுவுள்ளோரை உட்புகுத்தும் நல்லெண்ணங்கள் யாவுமே எம்மை வாழ்வாங்கு வாழ தூண்டியெழுப்புவதாக இருப்பதைத் தினமும் கண்டு அனுபவிக்கிறோம்.



இறக்கத்தான் பிறந்தோம், இறக்கும் வரை இரக்கத்தோடு வாழ்வோம்; என்ற புனித அன்னை திரேசாவின் உருக்கமுள்ள, கருணை மிக்க உள்ளத்தை, உருமாற்றுகிற வார்த்தைகள், எப்பொழுதுமே எமது பணி வாழ்விலே அர்த்தம் கொடுக்கும் பொன் மொழிகளாக உள்ளன. இரக்கம் நிறைந்த கடவுள், தன் மகனின்

அவதாரத்தின் மூலம் நிறை வாழ்வையும் நிறை மகிழ்வையும் கொடுப்பதாகவும், வாழ்விழந்த மனித குலம் நம்பிக்கையின் ஒளி நோக்கிப் பயணிக்கும்.

எனவே எமது மனித நேயப் பணிகளிலே, எம் சொந்த அனுபவத்திலே எம் தனிப்பட்ட ஒவ்வொரு சிறிய பெரிய காரியங்களிலே, ஒவ்வொரு நிமிடமும் இறை பிரசன்ன உணர்வு நிலைகளிலே எம் துறவற அர்ப்பண வாழ்வை நிறைவாக வாழ்வோம். காலத்தைக் கடந்த கடவுள், இன்றைய காலத்தின் நவீனமான மாற்றங்களோடு, அவரை மட்டுமே பற்றிப் பிடித்தவர்களாக வாழ்வோம். இறையாட்சிப் பணியிலே மானிடத்திற்கு மதிப்பளித்து தாழ்மையான இறை இயேசுவின் வழி நின்று இரக்கத்தோடும், அன்போடும், அடுத்திருக்கும் அனைவருக்கும் நம்பிக்கையின் ஒளி உதயமாகிட எம் வாழ்விலே பயணிப்போம்.

அருட்சகோ. வசந்தி.M
வவுனியா

## A Life time Together



Did you know that plant and wood ants are friends for Life?

Wood ants play an integral part in the life of plants, from the sprout of a seedling till it becomes a great tree. The flowering plants provide food to the young ants while ants help disperse the seeds.





As an aging tree's life comes to an end, wood ants help it return nutrients to the soil, bringing the cycle back to the beginning.

.

# Christmas gift

Friends and family all unite
To put up Christmas tree and lights,
Together with colorful decorations
While eating delicious delights.

Walls are white or color washed,
Clothes follow fashion of the day
But the Unwanted birthday Baby
Lies on bed of straw and hay

With broom in hand on x'mas day
Joseph made stable spick and span,
A poor but comfortable resting place
for Jesus , the God made Man .



Shivering  child felt so warm,
By the breath of cattle and sheep,
While Mary sang a lullaby
Baby Jesus fell fast asleep.

When He woke up He saw
Shepherds with wool, milk and things,
He also saw the expensive gifts
Given by the three wise Kings.

With open arms, toothless smile
He waits for your gift of love
Though you see  a helpless babe
He is the King of heaven above.

*Sr.Shanthini.A.C*

# அர்ப்பணித்தோம்...



கார்த்திகைத் திங்கள் முப்பதாம் நாள் திருக்குடும்ப பொது நிலையினரில் எட்டுக் குடும்பங்கள் விசுவாசத்தை ஆழமாக வாழ, இறைவனுக்கு மாத்திரமே பணி செய்ய, குடும்ப உறவுகளை வளர்த்து ஐக்கியத்தைக் கட்டி எழுப்ப, தம்மையே முழுமை யாக அர்ப்பணிக்க முன்வந்த மகிழ்வான நாள். இவர்களை நெறிப்படுத்த தேசியத் தலைவி அருட்சகோதரி நெவிஸ் பல தடவைகளில் எமது இல்லத்திற்கு வந்து, பல வழிகளிலும் அவர்களை ஆயத்தப்படுத்தினார். திருக்குடும்ப பொதுநிலையினருக்கு பொறுப்பான அருட் சகோதரி றெஜீனா, ஸ்ரெலா இவர்கள் அர்ப்பணத்தை ஆழமாக வாழ பலமுறை அறிவுரைகள் வழங்கி ஆயத்தம் செய்தனர்.

மாலை ஆறு மணிக்கு திருப்பலி அருட்பணி ஆனந்தகுமார் அடிகளின் தலைமையில் ஆரம்பமாகியது. திருப்பலிக்குரிய ஆயத்தங்களை அருட்சகோதரி ஜெனோவாவுடன் இணைந்து அடிப்படை உருவாக்கப் பிள்ளைகளும் செய்தனர். திருப்பலிக்கு இரணைமாதாநகர் பங்கில் முன்பு அர்ப்பணம் செய்தவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். மறை உரையில் குடும்பம் எப்படி வாழ வேண்டும் என்பதை திருக்குடும்பத்தை மாதிரிகையாக வைத்து அறிவுரை வழங்கப்பட்டது. மரியாளையும், சூசையையும் பின்பற்றி பிள்ளைகளை ஞானத்திலும், அறிவிலும் வளர்க்கும் பொறுப்பு பெற்றோருக்கு உண்டு என்று அருட்தந்தையால் கூறப்பட்டது.

வாழ்வுக்கு ஒருவழி என்னும் பொதுநிலை அங்கத்தவர்களின் ஒழுங்குப் புத்தகத்திலிருந்து நான்காம் இலக்கத்தை அருட் சகோதரி நெவிஸ் வாசித்து திருக்குடும்ப பொது நிலையினரின் வாழ்வு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் நசரேத் திருக்குடும்பத்தை

பின்பற்றி குடும்பத்தில், தொழில் தளங்களில், சமூக அரசியலில் உறவுகளில் ஐக்கியத்தின் சின்னங்களாக விளங்க வேண்டு மென்றும் அறிவுரை வழங்கப்பட்டது.

குடும்பங்களாகச் சென்று எரியும் திரிகளுடன் தனித்தனியாக ஆண்டவருக்கு தங்களையே அர்ப்பணித்தார்கள். அனைவரும் குடும்பங்களாக காணிக்கை செலுத்தினர். இறுதியாக நற்கருணை விருந்தில் பங்கு கொண்டு இறுதி ஆசிருடனும் நல்லதோர் குடும்பம் திருக்குடும்பம் என்னும் கீதத்துடனும் திருப்பலி இனிதே நிறைவெய்தியது.

திருக்குடும்ப பொது நிலையினர் தமது மகிழ்வை வெளிப்படுத்த தாமே ஆயத்தம் செய்த இராவிருந்தில் அனைவரும் மகிழ்வோடு பங்கு கொண்டனர். இங்கே ஒரு குடும்ப உறவை உணரக்கக்கூடியதாக இருந்தது. எமது இயக்குனர் தந்தையின் கனவு நனவாகியது ‘‘முன்னேறிச்செல்லுங்கள்’’ என்னும் அவரது வார்த்தை நிறைவேற அனைவரும் சேர்ந்து உழைப்போம்.

***“இயேசு மரி சூசை உங்களுடன் எப்பொழுதும் இருப்பார்களாக”***

அருட்சகோதரி. மேசிடஸ்
முழங்காவில்



# The Dream of Jesus and the Catholic Church

## Introduction

There are several paradigm shifts that have taken place, and are taking place today. These paradigm shifts are challenging the way we thought about many things in the past. Some of our traditional beliefs, our religious practices, our traditions, our thinking patterns are all being challenged today by New Science, the New Cosmology, depth psychology and many other sciences. We cannot turn a blind eye to these and do some religion in isolated ghettos. Worse, we may lead the people astray by our out dated beliefs and practices.

The Universe story is no more a theory but a given. Similarly, the evolution is no more a theory but a given. If we accept these, and I don't see any reason why we shouldn't, then many things in the organized religion called the Catholic Church has to fundamentally change. Are we ready? Will we accept the challenge? Or we will adamantly hold on to the traditions which are made meaningless today, and doctrines that are not relevant to us anymore?

## The Dream of Jesus

Did Jesus have a dream? I think He did. On the one hand He was very critical of the oppressive religion of his time, He wanted to liberate or better He showed the way to liberate the people themselves from this oppressiveness. He was not very appreciative of the ritualism of 'His' religion as it was practiced. He constantly challenged the power blocks of that time who were controlling the people in the name of religion. Jesus spoke of an equal society which is different from the hierarchical structure of the society of his time. He spoke of justice, forgiveness and love. Relationship is the theme that strongly runs through the Gospels. Look at this for an example. *"If you bring your sacrifice to the alter and there you remember that your brother or sister has something against you, leave your offering at the alter and go and reconcile*

*with your brother or sister first."* Doesn't it say that relationship is more important than sacrifice? If we strictly follow this statement of Jesus, many of us including some priests and bishops have to go away from the alter and be reconciled first. How many Masses have to stop at the offertory? So, we do not bother and we continue the Mass. This is dualism.

Read, what I call the inaugural speech of Jesus which is popularly called 'the Sermon on the Mount.' How powerful it is! A ground breaking speech indeed. Read his parables and stories which expound his dream in different ways.

Jesus wanted to show **a new way of living** where all can relate to one another, and a new world order can be created. He said "I am the Way." It can also be translated as **Love is the Way**. He told us how to be disciples. It is a radical discipleship that He called us for. He never made a distinction between the spirituality of the Bishops, or of the priests or of the religious or of the laity or of the married. He told us about a spirituality that will lead us to mysticism. This gospel based spirituality if I can call it so, is a universal spirituality, an inclusive one. He told us how He is one with His 'Father,' a mystical experience. When He called God as his 'Father' he did not make gender identification but He was trying to speak of God in intimate relationship when Yahweh of the Old Testament was a very distant God, a punishing God, and a jealous God etc. He spoke of God as Love which seemed to have been well understood by John who wrote in his letter that *"God is love."* Jesus was a revolutionary and he wanted his revolution to be continued by his disciples: *"Do this in memory of me."*

Read his fantastic speech at the last supper, a testament of love. He also pointed to the peak of love; *"Greater love than this no person has than to lay one's life for his friends."* He lived for a cause and died for a cause. Yes, he loved us, and he wanted us to liberate ourselves from all oppressions especially internal un-freedom or internal slaveries.

He was a visionary. He called us his disciples to do the same. Will we accept this challenge?

## Living the Dream of Jesus

The early followers of Christ, who called themselves "the people of the way," seemed to have lived the dream of Jesus. Look what the Acts of the Apostles say: *"And all who shared the faith owned everything in common; they sold their goods and possessions and distributed the proceeds among themselves according to what each one needed. Every day, with one heart, they regularly went to the temple but met in their houses for the breaking of bread; they shared their food gladly and generously; they praised God and were looked up to by everyone. Day by day the Lord added to their community those destined to be saved."* Acts. 2: 44-47.

And again: *"The whole group of believers was united, heart and soul; no one claimed private ownership of any possessions, as everything they owned was held in common. ...None of their members was ever in want, as all those who owned land or houses would sell them, and bring the money from the sale of them, to present it to the apostles; it was then distributed to any who might in need."*Acts. 4:32-33 & 34-35. The early followers of Christ seemed to have lived the dream of Jesus. When we read the letters written by Paul, James and Peter, it becomes clear that already in the time of the apostles themselves everything among the Christians were not alright to say the least. Unfortunately, when the numbers grew to large numbers, structure and organization got in. It is unavoidable I guess. Institution takes over the charism. A reality we have seen over and over again.

## Trapped in the Empire

When the Church was incorporated into the Roman empire, the empire system got adopted by the church. Gradually it became organized, dogmas were created, doctrines were promulgated, canon law was

formulated, and a powerful hierarchical system got into place. A human kingdom got built and the Kingdom of God was forgotten or rather in the name of the Kingdom of God! The scholastic theology based on Greek philosophy was created by the great theological scholars. A dualistic religion came in. All what Jesus criticized in the religion of his time now got into the organized religion called the Roman Catholic Church. It also became an exclusive club, a closed church. Freedom of expression was lost; those who speak differently were excommunicated or thrown out of the organization. The dream of Jesus got lost! Unfortunately, this has gone on for number of centuries. The organized Catholic Church became an enemy of science. There was constant tension between the Roman Catholic Church and science of the day. Things are slowly changing now…

## Religious Life

The religious life as we have now is a later development in the history of the church. History of religious life shows clearly that it too has got evolved over the centuries. Of course, the monastic model, the mendicant model, apostolic model and lastly the Missionary congregations have all contributed to the growth of the institutional church. They have offered the world tremendous gifts, in the way of its schools, hospitals, social centres, etc. No one will question that. Their contribution to the world is colossal.But the model of religious life as we have it today has **outlived its time**. The institutionalized religious life became a closed system as the church. From systems theory we know that any closed system over the years becomes sick. So is religious life as a system. Hence, it is creating lots of problems within. The religious say their prayers but there is a poverty of spirituality with a little exception. This is the core of the problem in my view. There is power struggle within, jealous of one another, destructive gossip, wanting to teach in national schools, wanting top jobs in the congregation, caring for kith and kin, mishandling of projects, individualism, materialism, and even consumerism have crept into religious life. Members live under the same roof, and it adds to the

problem. When members with different motivations live under the same roof will naturally create problems. In fact, it goes against the nature of community. Please note that I am not saying people with different ministries but people with different motivations to be religious. Religious congregations recruit persons to join them to build their own kingdom but in the mane of Jesus cannot build religious communities.

Further, the theology of religious life is based on the scholastic theology which is not relevant anymore. The highly institutionalized religious life has got sick and it is stinging. Religious life has become NGOs. Some NGOs are exceptionally powerful in their prophetic character. Most religious congregations have lost their prophetic character.



## Today

What is the universe story? This may not be the place to elaborately speak to the Universe story. So I will give a small sketch that we need to take into consideration. Billions of years ago the universe began evolving, and it is still evolving. The Universe story is not over. God is **in** creation and **not outside** of it. We as human beings are also evolving all the time. We are part of this Universe, and not masters of the Universe. Hence, we have no right to rape the world for the benefit of a few greedy ones. Everything in this Universe is related to one another including all of us – the human beings. The inter-relatedness of all things including people is very revealing. It goes with the dream of Jesus.

# The Future….. Now




There is a spirituality that is emerging today, and in my opinion meets the needs of the contemporary world, and it is an inclusive one. It seems to be the way forward in my opinion. The religious need to take on this and build a new way of being religious. Or else we will pave the way for more scandals and be counter witnesses to Christ. The future religious needs to understand the real meaning of being religious. What makes a religious a religious is the conscious commitment to search for God in one's life. This search is a journey, and a lifetime undertaking. The mission of these religious needs to flow out of this journey, out of this conversion experience, out of this personal growth. In other words, the mission of a religious needs to flow out of her/his personal growth. The future religious is called to be a contemplative prophetic missionary or else everything else is useless.

*S.M. Selvaratnam*

(N.B. I am sorry for condensing this article; time and space are two factors that I needed to take care of).

# ஆ(அவ)தாரம் தேடும் மனிதம்




மனித மனம் பேசுகின்றது...

மௌனமாகி நிற்கும் மாந்தரிடையே இடம் தேடும் மனமே மாண்புமிக்கது.

2016ம்ஆண்டு யேசுவின் உன்னத பிறப்பு எம்மை மனித மனங்களில் அவதாரம் எடுக்க அழைக்கின்றது. அடுத்தவரில் இறை மனித முகத்தை காண உறவுடன் வாழ உள்ளத்தை திறப்பதே திறந்த வெளிக்குடிசையின் அழைப்பு, விண்ணக மைந்தனின் பிறப்பு, மரிமைந்தனின் விருப்பு. விண்ணக மைந்தன் என் மனதில் இடம் தேடினார் தேடுகின்றார். ஏனென்றால் என்னோடு வாழ்பவர்களுடன் வாழ்வைப் புதுப்பிக்க பகிர அமைதியுடன் பயணிக்க... திருப்தி என்ற குடிசையில் தான் மகிழ்ச்சி அவதாரம் எடுக்கின்றது. அந்த மகிழ்ச்சி எம் மனங்களில் குடும்பங்களில் குழுமங்களில் அவதாரம்

எடுக்குமா? அதுவே எம் தேடல். அதுவே மனித மனங்கள் தேடும் அவதாரம். எனவே என்னோடு வாழ்பவர்களுடன் உண்மையான உறவோடு திருப்தியோடும் அமைதியோடும் பிறக்கவிருக்கும் பாலகனை வரவேற்போம்.

பல மனநிலை கொண்ட மனித முகங்களுடன் நாம் வாழ்வை பகிருகின்றோம். பொது நோக்கும் தனிப்போக்கும் ஒரு புறம், சந்தர்ப்ப சூழ்நிலைக் கேற்ப வாழ்வை மாற்றி வெறுப்பினை மறு புறமும் எதிர்நோக்குகின்றோம். சவால்களுடன் சக்தியை வீணாக்குகின்றோம். இருப்பினும் அமைதியுடன் எம்வாழ்வை புதுப்பித்துக்கொள்ள இவ்வாண்டு கிறிஸ்மஸ் அழைக்கின்றது. குடிசையில் பல்வேறு அலங்கார வடிவத்தில் அவதாரம் எடுக்கும் பாலகன் நம் உள்ளத்தில் எளிமையாக பிறக்க இடம் கொடுப்போம்.

எம் உள்ளத்தில் வர, வாழ, வளர ஆசைப்படும் பாலகனுக்கு நம்மையே எளிமையின் குடிசைகளாக மாற்றுவோம். அமைதியின் ஊற்று நம் உள்ளத்தில் ஊற்றெடுப்பதாக.

“HAPPY CHRISTMAS TO YOU ALL”

*Sr. NirosaPathmasenan*

# Traditions of Christmas Bells



Bells, especially church Bells, have traditionally been associated with Christmas for a long time. In the Anglican and Catholic Churches, the church day starts at sunset, so any service after that is the first service of the day. So a service on Christmas Eve after sunset is traditionally the first service of Christmas day! In churches that have a Bell or Bells, They are often rung to signal the start of this service.

In some churches in the UK it is traditional that the largest bell in the church is rung four times in the hour before midnight and at midnight all the bells are rung in celebration.

In the Catholic Church, Christmas and Easter are the only times that Mass is allowed to be held at Midnight. It's traditional that at both midnight Masses, the church and altar bells too in many cases are rung while the priest says the "Gloria" (Gloria in excelsis Deo).

Having a Mass at midnight at Christmas dates back to the Early Church, when it was believed that Jesus was born at midnight, although there has never been any proof of this! A lot of churches have midnight services on Christmas Eve, although not every church will have a Mass or communion as part of the service.

In many catholic countries such as France, Spain and Italy the midnight Mass service is very important and everyone tries to go to a service. In Victorian times, it was very fashionable to go carol singing with small hand bells to play the tune of the carol. Sometimes there would only be the bells and no singing! Hand bell ringing is still popular today.

*Miss. Vijitha*

# இறை இரக்கமும் கிறிஸ்து பிறப்பும்

உலகில் பிறக்கும் எந்த மனிதனும் தற்செயலாக பிறந்ததுமில்லை பிறக்கப்போவதுமில்லை. ஏனெனில் உலகம் உருவாகும் முன்பே அனைவரும் தந்தையின் எண்ணக்கருவில் முன் குறிக்கப்பட்டிருக்கின்றனர். உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மை கிறிஸ்து வழியாக தேர்ந்தெடுத்தா".(எபே1:4) ஆனால் எல்லோரையும் ஒரே காலத்தில் உதயமாக்கவில்லை. மாறாக ஒவ்வொருவரையும் ஓரு குறிப்பிட்டகாலத்தில் இடத்தில் இனத்தில் பிறக்க வைக்கின்றார். ஒவ்வொருவருக்கும் வரையறையான வயதெல்லை பணி குறிக்கோளுடன் வாழவைத்து எல்லோரும் தன் சாயலைக்கொண்ட தன் பிள்ளைகளென அன்பும் இரக்கமும் கொண்டவராக இருக்கிறார் இறைவன்.

முதல் மனிதன் ஆதாம் இறை கட்டளையை மீறி பாவம் செய்தாலும் அதற்குரிய தண்டனையை விதித்தாலும் இரக்கத்தின் இறைவன் மனிதரை மீட்க மீட்பர் ஒருவர் வருவார் என வாக்குறுதி கொடுத்தார். ஏதேன் தோட்டத்தில் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன் அவள் வித்து உன் தலையை காயப்படுத்தும்" (தொ.நூ3:15) இவ்வாக்குறுதி உடனடியாக இடம் பெறவில்லை. இதற்காக ஆயிரக்கணக்கான வருடங்கள் காத்திருந்தனர் மக்கள்.

இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள முறிவை இறைமனிதனால் தான் ஒப்புரவாக்க வேண்டுமென்பதால் இறைவன் ஓரு குலத்தை தேர்ந்தெடுத்து ஆபிரகாம் ஈசாக் யாக்கோபு என குலமுதுவர்களை தேர்ந்தெடுத்தார் பின் இறைவாக்கினர் மூலம் மீட்பரின் வருகையை வெளிப்படுத்தினார். இறுதி நாட்களில் தன் மகனையே உலகிற்கு கொடுக்குமளவிற்கு எம்மேல் அன்பும் இரக்கமும் கொண்டார்.

தன் மகன் கருவாக ஒரு பெண்ணின் உதரம் தேவைப்பட்டது யாக்கோபின் குலத்தில் தாவீதின் மரபில் இயேசு என்னும் இறை-மனிதகுழந்தை பிறக்க இறைவன் சித்தம் கொண்டார் பூலோகம் தோன்று முன்னே ஓ பூரணத் தாயே மேலோனின் உள்ளம் தன்னில்

நீர் வீற்றிருந்த தாயே என்ற பாடல் பொருள் பொதிந்ததாக அமைந்துள்ளது. இறைவன் தான் முன் குறித்து இருந்தாலும் மனிதனின் சுதந்திரத்தை மதிப்பவர் மரியாளின் ஒப்புதலையும் மிகவும் காத்திரமாக மதித்தார். எனவே கபிரியேல் தூதர் மூலம் செய்தி அனுப்பப்பட்டு அவளும் பல வினாக்கள் மூலம் தெளிவு பெற்றபின் “இதோ உமது அடிமை உம் வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்” என்றாள். இதைத்தான் எம் திருத்தந்தை பிரான்சிஸ் உலக மறைபரப்புத்தின செய்தியில் கூறுகின்றார் இறை இரக்கமானது முழு வடிவம் பெறுவது இறைவன் மனிதனாக இவ்வுலகில் அவதரித்த போது என்றும் தன் தந்தை இரக்கத்தின் மட்டில் எவ்வளவு செல்வந்த ராக இருக்கிறார் என்பதை



யும் எடுத்துக்காட்டி வெளிப்படுத்தினார். அடிக்கடி அது பற்றி பேசினார் உவமைகள் மூலம் விளக்கினார். நாமும் அருட்சாதனம் சிறப்பாக நற்கருனை மற்றும் நற்செய்தி என்பவற்றை பெறுவதன் மூலம் யேசுவை எம் உள்ளத்தில் வரவேற்று அவரைப் பின்பற்றி இறைதந்தை இரக்கம் உள்ளவர் போல் நாமும் தூய ஆவியின் வழிநடத்ததலின் மூலம் மறு கிறிஸ்தவனாக அல்ல மறு கிறிஸ்துவாக அவதாரம் எடுத்து கிறிஸ்துவின் திருமுகத்தை வெளிப்படுத்துபவர்களாகவும் பிறரில் குறிப்பாக எம் இல்லத்தில் வாழ்பவர்களில், மற்றும் ஏழைகள் ஒதுக்கப்பட்டோர் எமக்குத் துன்பம் தருவித்தோர்களில் கிறிஸ்துவின் முகத்தைக் காண்பவர்களாகவும் நற்செய்தியின் ஒளியில் வாழ்ந்து சான்று பகர்வோம்.

அருட்சகோ.பெனிக்னஸ்
அரிப்பு

# வேண்டாமே மணமுறிவு

பிரச்சினை இல்லாத வாழ்க்கை யாருக்கும் வாய்ப்பதில்லை. ஆனால் பலருக்கும் வாழ்க்கையில் பிரச்சினை அதிகமாகவும், அடிக்கடியும் ஏற்படுகின்றது. இதற்கு எல்லை மீறிய எதிர்பார்ப்பும் ஒரு காரணமாகும். இது கணவன் - மனைவியர் மத்தியில் சற்றுக் கூடுதலாகக் காணப்படுகிறது.

சமூதாயக் கட்டுக்கோப்பின் ஆணிவேர் திருமணம். ஆனால், இன்றைய அநேக திருமணங்களில் இந்த வேர் ஆட்டம் காண்கிறது. காரணம் இருபாலாரினதும் அபரீமித எதிர்பார்ப்பு. இளைய சமுதாயத்தினரின் எண்ணச் சுழற்சியால் அவர்களது எதிர்பார்ப்புக்கள் மாறிவருகின்றன. உலகின் பல பகுதிகளிலும் நாள்தோறும் நிகழ்கின்ற வியத்தகு நிகழ்ச்சிகளும் எழுச்சிகளும் அவர்களது சிந்தனை ஓட்டத்தை பாதிக்கின்றது.

தன் மனைவி இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற கனவு கணவனுக்கும், தன் கணவன் இப்படித்தான் இருக்கவேண்டும் என்னும் கனவு மனைவிக்கும், ஆரம்ப எதிர்பார்ப்பாக எழுகின்றது. அவர்களின் கனவு பொய்த்துப் போகவே, மணவாழ்க்கை கசக்க ஆரம்பிக்கிறது. இன்னும் சிலர், தமது சுதந்திரத்தை அடைமானம் வைத்து இந்த திருமணபந்தத்தைச் சுமக்க வேண்டியுள்ளது. இதுவரை நீ வாழ்ந்தது பற்றி எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் இனிமேல் என் விருப்பங்களுக்கு ஏற்றபடி தான் நீ வாழ வேண்டும் என்று அநேகமான ஆண்கள் தம் மனைவியருக்குக் கட்டளையிடுகின்றனர். எங்காவது ஒரு மூலையில் இது மாறுவதுமுண்டு ஆயினும் பெரும் பாதிப்புக்களைச் சந்திப்பது பெண்கள் தான். இந்த மாற்றம் நிகழாவிடின், அவர்களது நெஞ்சத்தின் அடிஆழத்தில் ஏமாற்றம் எனும் தீ நீறு பூத்த நெருப்பாகி பின் புகையத் தொடங்கும். இதன் விளைவு மணமுறிவு.

நல்ல திருமணம் எப்படித் தோற்றுப்போகும் என்ற கேள்விக்கு எளிதாக சொல்ல வேண்டும் என்றால், வெளிப்பார்வைக்கு நல்லது போன்று தோன்றிய திருமணத்தின் உள்ளே சில குறிப்பிடத்தக்க குற்றங்களும் குறைபாடுகளும் இருந்திருக்க கூடும் அதை சகித்து விட்டுக்கொடுக்க முடியாது அவர்களின் EGO என்பது கண்கூடு. ஒரு

மணமுறிவு நிகழ்கின்ற போது ஏதோ பொருந்தாத திருமணம் போலும் அதனால் தான் முறிந்து விட்டது என்று எண்ணுவது தான் நடைமுறை வழக்கு. ஆனால் எல்லா விதத்திலும் பொருத்தமாக இருந்த திருமணங்கள் கூட உடைந்து போகின்றது. சம்பந்தபட்டவர்களின் எதிர்பார்ப்புக்கள் எல்லை மீறுவதே இதற்கு காரணம்.

இந்த நிலை எல்லை மீறிய எதிர்பார்ப்புக்களினால் மண வாழ்வில் மனக்குறையும் அதிருப்தியும் ஏற்படுகின்றன. அவற்றில் சில கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத அளவு கடுமையானவைகளாக இருக்கின்றன. மேலும் பல திருமண எதிர்பார்ப்புக்கள் கூடிமகிழவும், குழந்தைகளைப் பேணவும் வேண்டுமென்ற நிலையிலிருந்து உயர்ந்து குடும்பவருவாயைப் பெருக்கவும் குறையின்றிப் பழகவும் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்ப்புகளும் எண்ணங்களும் உயர்ந்து கொண்டே செல்கின்ற போது அதை எட்டுவதும் இட்டு நிரப்புவதும் பலருக்கு இயலாத ஒன்றாகி விடுகிறது. இந்த இயலாமை மணமுறிவைப் பரிசாக பிரசவிக்கின்றது.

*A Seeker*



# உன்னத விழா

2016ம் ஆண்டிற்கான செயற்திட்டத்திற்கு அமைவாக 3ம் தவணைக்கான வருடாந்த நிகழ்வான "ஒளிவிழா" 29.11.2016 அன்று மாலை 6.00 மணியளவில் ஓசான இல்லப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கடந்தவருடங்களில் நடைபெற்ற ஒளிவிழாவினைப் போலன்றி இம்முறை மிகவும் மாறுபட்ட முறையில் எளிமையாக பிள்ளைகளின் சந்தோசத்தை மட்டுமே நோக்கமாக கொண்டதாக இவ் ஒளிவிழா அமைந்தது.



பிள்ளைகள் பலவித ஆடைகளுடனும் அலங்கார தோற்றத்துடனும் முகங்களில் புன்னகைதவழ "எங்களின் ஒளிவிழா" எனும் கம்பீர தோரணையுடன் காட்சியளித்தனர். மண்டப அலங்காரம் பெற்றோர்களின் வருகை பிள்ளைகளின் மகிழ்ச்சியை இன்னும் மிகுதியாக்கியது. அவர்களின் எதிர்பார்ப்பு இன்னும் ஒன்றாக காணப்பட்டது. இவர்கள் இங்கு வருகை தருகின்ற குருக்கள் உபகாரிகள் அனைவரிடத்திலும் எங்களின் ஒளிவிழாவிற்கு வாருங்கள் என்று பலதடவை சொல்லிய வண்ணம் இருந்தார்கள்.



மொத்தம் பத்து நிகழ்ச்சிகளை கொண்டதாக இவ் ஒளிவிழா காணப்பட்டது. எமது முதல் நிகழ்வாக எம் இல்லத்திற்கு வருகை தந்திருந்த திருக்குடும்ப யாழ் மாகாண ஆலோசகர் அருட்சகோதரி. ஜொய்லின் முன்னாள் இல்லத் தலைவி அருட்சகோதரி.றெஜினா சந்தியாப்பிள்ளை அவர்களும் இல்லக் குழு சார்பில் சகோதரி. நிறோசா

அவர்களும் மாலை அணிவித்து வரவேற்க பட்டார்கள் ஆசிரியர்களின் ஒவ்வொரு நிகழ்விலும் ஒவ்வொரு பிள்ளையின் இயலுமை வெளிக்காட்டப்படும் முகமாக அனைவரும் நிகழ்வுகளில் உள்வாங்கப்பட்டிருந்தனர். தாமும் மேடையில் ஏறி தம் உறவினர் பெற்றோர் முன்னிலையில் ஏதோவொன்றை செய்கின் றோம். அனைவரும் எம்மை பாராட்டுகின்றனர் என்ற பெருமிதம் கலந்த புன்னகை அவர்களின் முகங்களில் காணப் பட்டது. அதேவேளை உறவினர் வராத பிள்ளை களின் மனோநிலை மிகவும் வேதனை கலந்த ஒன்றாக காணப்பட்டது. என்னை கூட்டிப்போக யார் வருவார்? எம்மவர் எம்மைப் பார்க்க ஏன் வரவில்லை? என்ற அங்கலாய்ப்பு கலந்த சோகம் சிலர் கண்களில் காணப்பட்டது. ஒளிவிழா நிகழ்வின் செய்தியினை அருட்சகோதரி. ஜொய்லின் அவர்கள் வழங்கி நிகழ்வை சிறப்பித்தார். தொடர்ந்து நத்தார் தாத்தாவின் குதுாகல வருகையுடன் ஒளிவிழா இனிதே நிறைவு பெற்றது.



சு. டெல்சியா
ஆசிரியை
சத்துருகொண்டான்

## My experience of Christmas 2016 from what I see and hear!

I hear Carols – Three young girls sang Carols for five hours to raise money for a Charity. The three girls are young working women who wanted to share their time and talent to raise funds and they did. I see volunteers - sitting next to the tills at the supermarket to help to pack and raise funds and awareness for localHospital - Giving up their Saturday to raise funds during Christmas time.

I see team work - In an Elderly nursing home a team of workers with the local church arranging a carol service and resident party and Christmas day lunch. I see presentation of Scripture - presentation of "Jesse Tree" with 28 symbols and scripture reading from creation to the birth of the Lord which was very spiritually refreshing.

I see work - At my parish, the parish gives lunch for lonely people on Christmas day. I see and hear the volunteers work to feed 150 people with a full Christmas meal. I see Lights - in every shopping centre the Christmas lights being switched on, as a community ceremony.

I see remembrance - In a small prayer group I am part of I see and hear the good will and songs and remembrance of Tsunami. The list goes on ………… I encounter fresh energy being released into the community, a unity of purpose actualised to help and uphold human dignity through charities and volunteering and a great big synergy realised in bringing people together, it is a scene of festivity, human interaction, a song, a party, a cry, a sigh.

Christmas, I see is a mixture of human emotions, expectations, sudden unexpected joy and surprise and sleepless nights and a lot of hard work! I feel very similar to the actual first Christmas. I do not want to miss out on anything, I want to be part of any opportunity to be part of the cosmic family to experience this wonder. In seeing and hearing I encounter and I am converted towards a more human, hands on life style which gives great dignity. My suggestion to my friends is GET INVOLVED! In pain and in joy.

*A believer of Christ*

# நன்றியில் கரைந்த சில நிமிடங்கள்

மார்கழித் திங்கள் 8ம் நாள் நம் மனங்களில் மகிழ்வையும் பூரிப்பையும் அள்ளித்தரும் இனிய நாள். உலகை மீட்க இறைவன் கொண்டிருந்த பேரிரக்கமே இந்த விழாவாகும். காலம் நிறைவுற்ற போது கடவுள் தம் தூதரை அனுப்பி மரியாளின் சம்மதத்தைப் பெறுகின்றார். “நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” என இறைவனின் திட்டத்திற்கு தன்னை முழுமையாக கையளித்தவளே எம் அன்புத்தாய். அவளது பண்புகளை நாங்களும் எம் வாழ்வில் கடைப்பிடித்து வாழ அழைக்கப்படுகின்றோம்.



இந்த நாளானது யாழ் மாகாண திருக்குடும்ப சகோதரிகளான எமக்கும் மறக்க முடியாத நாளாகும். 1981ம் ஆண்டு மார்கழி 8ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் சத்துருக்கொண்டான் கிராமத்தில் மாற்றாற்றல் கொண்ட பிள்ளைகளுக்கான ஓசானம் இல்லத்திற்கு அடிக்கல் நடப்பட்டது. மேலும் 2016ம் ஆண்டு மார்கழி 8ம் திகதியுடன் எம் பணியை நிறைவிற்கு கொண்டு வந்த நாளாகும்.



காலையில் சகோதரிகள் ஒன்றிணைந்து நற்கருணை வழிபாட்டினை நடத்தினோம். இறைவனின் அளப்பரிய ஆசீர் வாதங்களுக்காகவும் உடன் இருப்பிற்காகவும் இறை பராமரிப்பிற்காகவும் நன்றி கூறியும் தொடர்ந்து பயணி க்கவும் அருளை வேண்டினோம்.

பின்பு உடன் பணியாளர்களைச் சந்தித்து நன்றி கூறி அவர்களுக்கான சிறிய நன் கொடையும் எமது சகோதரிகளால் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 11.30 மணியளவில் அருட்தந்தை தேவாவினால் நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அனைத்துப் பிள்ளைகளுக்கும் பணியாளர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

மேலும் மாலை 6 மணியளவில் வின்செண்டி போல் அங்கத்தினர் ஆன்மீக குரு அலெக்ஸ் அடிகளாரின் முன்னிலையில் எமது பணிகள் நிறைவிற்கு கொண்டு வரப்பட்டது.

கனத்த நெஞ்சத்துடனும் கண்களில் கண்ணீருடனும் கரங்களைவிட்டுச் செல்லும் எம் பணிக்கு பிரியாவிடை கூறினோம்.

பல சகோதரிகளின் அயராத உழைப்பினாலும் முயற்சியினாலும் 35 வருடங்கள் பல்வேறு வளர்ச்சி, தளர்ச்சிகளையும் தாண்டி பயணித்த பயணம் ஓர் அற்புதமான, அதிசயமான அனுபவமாகும். இந்த இல்லத்தை உருவாக்கி உழைத்த ஆயர்கள், குருக்கள், புனித வின்சன்டி போல் சபை உறுப்பினர்கள், உடன் பணியாளர்கள், நன்கொடையாளர்கள், பயனாளிகளாக வந்து போன அனைத்து மாற்றாற்றல் கொண்ட திறனாளிகளையும் எம் நினைவலைகளில் சுமந்து தொடர்ந்தும் முன்னேறிச் செல்லுவோம். தடைகள் எமக்கொரு எல்லை அல்ல அவை எமது படிக்கற்கள், முயலுவோம் முன்னேறுவோம்.அழைத்தவன் துணையோடு



*Sr. Amali.K*

1986ம் ஆண்டு "ஓசானம்" சத்துருக் கொண்டான், மாற்றாற்றல் கொண்ட சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட போது, பிள்ளைகளைப் பராமரிக்க வண.ஆயர்யோசவ்கிங்சிலி ஆண்டகை அவர்கள் திருக்குடும்ப சகோதரிகளை நாடியபோது, அன்றைய மாகாணத் தலைவியாகப் பணியாற்றிய எம் சகோதரி மேரிகாமலிற்றாஅம்புறோஸ் அவர்கள், தூர நோக்குடன் இப்பணிப் பொறுப்பை ஏற்று வாழ்வு தொடர்ந்தது.

குழுத் தலைவிகளாக் கடந்த 30 வருடங்களில் பணியாற்றிய அருட்சகோதரிகள்:பற்றீசியாசே யாசவ், மில்றெட் பேதுருப்பிள்ளை, ஸ்ரெபா னிநீக்கிலாப்பிள்ளை, றெஜினா சந்தியாப்பிள்ை ள, அமிர்தராணி சேவியர், றீற்றா றொபேட் இவர்களும், இவர்களுடன் குழுக்களில் இணைந்த சகோதரிகள் ஒவ்வொருவரும், மிகுந்த அர்ப்பணிப்புடனும், அன்புடனும் இந்தப் பணியை முன்னெடுத்தனர். இவ்வருடம் மார்கழி 8ந் திகதி 30 வருடங்களைப் பூர்த்தி செய்து, திருக்குடும்ப சகோதரிகளின் பிரசன்னத்தை இவ் இல்லத்தில் நிறைவு செய்கின்ற இந் நாளிலே எம் சகோதரிகளுடன், எமது வாழ்வையும் பணியையும் ஒரு நிமிடம் அமைதியில் சிந்திக்கின்றேன்.

ஆபிரகாம் இறைவனால் அழைக்கப்பட்டு சொந்த நாட்டையும் நிலபுலங்களையும் விட்டுவிட்டு பணிக்கப்பட்ட நாட்டிற்கு செல்லும் படி கேட்கப்பட்ட போது, எதிர்காலத்தைப் பற்றிய எந்த நம்பிக்கையும் அவர் கண்களுக்குப் புலப்பட்டதாக இல்லை.

இன்று சகோதரிகள் நாங்களும், ஆழமான, பலதரப்பட்ட சகோதரங்களையும் இணைத்த மகிழ்ச்சியான இந்த வாழ்வை, இவ் இல்லத்திலே நிறைவு செய்கின்ற போது, மாற்றாற்றல் கொண்ட பிள்ளைகளுக்கு எதையும் விளங்கிக் கொள்ள முடியாதநிலை.

எங்களுடைய புன்னகைக்காக மாத்திரம் ஏங்கும் அவர்களின் முகங்களைப் பார்க்கின்றேன். சகோதரிகள் மாத்திரமே தஞ்ச மெனவாழ்கின்ற ஆசிரியர்கள், ஏனைய உதவி செய்கின்ற பிள்ளைகளின் அழுகைச் சத்தம், மிகவும் வேதனையைக் கொடுக்கின்றது. அருட்சகோதரிகளின் பணியில் நம்பிக்கை பெறும்

பலகுடும்பங்கள், தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தி கலங்கி நிற்கின்றனர்.

இத்தகைய மிகவும் அசாதாரணமான ஒரு சந்தர்ப்பத்திலே, சகோதரிகளாகிய எங்களுடைய மனநிலை... கண்ணீரும் வெறுமையும் மாத்திரமே எம்மை ஆட்கொண்டுள்ளன. இந்த உடைந்த வாழ்வின் நிலைப்பாடு தான், இறுதி நாளின் எமது அனுபவமாகும்.

இந்த ஆகமனகாலம் எமது வாழ்விற்குப் பொருள் கொடுக்கின்றது. ஒரு குழந்தையின் பிறப்பிற்காக காத்திருக்கும் தாயின் காலப்பகுதி, பல உணர்வலைகளை உள்ளடக்குகின்றது. காத்திருக்கும் காலம், நிறைவான நம்பிக்கையையும், பல எதிர் பார்ப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

சகோதரிகள் எமக்கும், பிள்ளைகளோடு முழுமையும் இணைந்து, அவர்களுடைய அழகிய வாழ்விற்காக மகிழ்வோடு செலவழித்த 30 வருட காலப்பகுதி அனுபவத்திலிருந்து வெளிவருவது, பெரிதும் வெறுமையையும் கண்ணீரையுமே இன்றுதந்தாலும், எது- எப்படி- எதற்காக -என்று எதுவும் தெரியாத நாளையநாள், தரவிருக்கின்ற வாழ்வை நம்பிக்கையோடு எதிர்நோக்குகின்றோம்.

ஒன்றாகசேர்ந்துவாழ்ந்தகாலங்கள் மிகமகிழ்ச்சியானது. இன்றையநாள் எமக்குத் தருகின்றவெறுமையிலும் கண்ணீரிலும் நாளைய நாளின் வெளிப்பாடுகளுக்கு நம்பிக்கை கொண்டு, வாழ்ந்து முடிந்த நிறைவாழ்விற்கு நன்றி கூறி, இறை ஆசீரை இந்த “ஓசானம்” இல்லத்தில் வாழும் சகோதரங்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டி, நன்றியோடு ஓசானத்திலிருந்து பயணிக்கின்றோம்.

“அனைத்திலும் இறைவன் மாத்திரமே”

*சிஸ். கிறிஸ்ராமரியதாஸ்*

## Christmas: The Birth of Christ Consciousness

What could be the connection between Christmas and Christ Consciousness?

This was one of my questions during this advent.

I wish to share some of the insights I found from different sources.

Christmas is a birth of a person who was fully human, fully alive and fully realized God within."The good news of God among us remains at the heart of this evolutionary/ cosmic world view"(Vowed for Mission No.2.2)

"Each December 25$^{th}$ approximately 2.2 billion people around the world in some form or another be celebrating the birth of Christ …..and with good reason. Jesus was clearly an incredible human being – a champion of compassion, peace, tolerance, unconditional love and The Truth. He never claimed to be the sole possessor of this Truth……..The true meaning of Christmas is that the very Being that you are is Truth…..Jesus speaks of an inner essence identity of every human being…..Some Christian mystics have called it the 'Christ within'; Buddhists call it 'your Buddha nature';for Hindus it is 'Atman', the indwelling God…….The real meaning of Christmas is to find that essential self that is universally experienced as the 'Christ within' no matter what your cultural or religious upbringing is. "(www.feelguide.com)

Christ is the life of all life. Christ means 'Anointed One'. Christ is for all in all. The man Jesus became Christ- a vehicle for pure consciousness.

Echart Tolle in his book "The Power of Now" Says "Jesus was a man who lived 2000 years ago and realized divine presence-His true nature…."

The 'Vowed for Mission' no 4.2 states, "Jesus initiated a new world order, a new consciousness…..Attainment of Christ consciousness was achieved by Jesus…... Jesus shared identicaldivine consciousness…… "All is caught up in the mystery of Christ"(Vowed For Mission2.3).

Echart Tolle quotes "Christ is The reality of your Divine presence…..Christ is your God essence".

Paster Tom Write in his book named "Christness" says, "Jesus' stuff and our stuff is the same stuff….." He challenges the believers to use their Christness as Jesus did. Christness is something identical between Jesus Christ and ourselves not simply Christ – Like.

It is also said in 'Bagavath Gita' that "Every soul is God……"

One of the major signs that the world is undergoing a paradigm shift is 'The Global Consciousness shift'(www.wakingtimes.com).

Some Bible Quotes connected to this insights :Col 1/15-20 , Jn4/24 , Gen 1/26 , 2Cor4/4 , Jn14/12 , Jn 17/11,21 , Mt 6/6-7 , 1Jn 3/2 , Mt 5/8 ,Phi 2/ 5 , Lk17/21 , Jn 14/12 , Mt 6/6 , 2Cor 4/4 , Jer29/14 , Jn10/30 , Jn10/34 , Jn14/20

By quoting from different sources what I realize is that 'there is an innermost, invisible, indestructible essence in all which is the same God Essence shared by Jesus'. For instance Jesus said that He is the light of the world (Jn8/12). At the same time He also said that we are the light of the Lord (Mt5/14). This leads to 'oneness' of all being – a universal oneness. The spirituality of oneness says that 'Everything reflects everything'. "All creation is being brought together in Christ."(V F M No – 8.2) .The revolutionary insight of Christness calls us to become what we were created to be. The highest level of adoration is through being. So, to be Christened being is the ultimate purpose of our existence here on earth.

The calls I hear from these insights :

- To expand our consciousness beyond our physical confinement through meditation and contemplation
- To be awakened to the power of now
- To unlearn certain concepts, belief systems etc. e.g.: our God concept
- To replace 'busyness' with a more contemplative approach to life. (V F M No-4.8)
- To develop a new sense of sacredness within and around us. (V F M No- 4.9)
- To make connection with and integrate the new insights etc.
- To follow Jesus and experience Christ

To be awakened to this new territory within

The new born Christ Consciousness must be awakened in the cradle of each heart. Ultimately, the value of Christmas is bringing this Christ vibration onto our Consciousness. Christmas is the birth of a new story…A new story of oneness ….being born!

"Keep me mindful of EmmanuelWhose sojourn brought a glimpse of home"
(Book-'May I have this dance' by Joyce Rupp)

Merry Christmas!.....Merry Christness!......

*Sr.Sebojini*

# கிறிஸ்து பிறப்பு விழா எமக்கு தரும் செய்தி

கிறிஸ்து பிறப்பு விழாவை நாம் காலாகாலமாக ஒரு மகிழ்ச்சி விழாவாக கொண்டாடி வருகின்றோம். ஒரு புது வாழ்வை தொடங்குவதற்கு கன்னி மரியாள் தம் மகனை நம்மிடம் கையளிக்கின்றாா் இயேசு எளிய குடும்பத்தில் தீவனத்தொட்டியில் பிறந்தாா்.

சாதாரண இடையா் தான், இப்பிறப்பின் முதற்சாட்சிகள். ஆம், ஏழ்மையில் விண்ணகத்தின் சாட்சி வெளிப்படலாயிற்று.

நாம் ஒவ்வொருவரும் விண்ணகத்தில் நுழையக் குழந்தைகளாக மாறவேண்டும் எம்மை தாழ்த்தி சிறுவா்களாக மாறவேண்டும் அமைதியின் இளவரசரை அனைத்துலகமும் அறியச்செய்யும் பணியை ஆற்ற நாம் அழைக்கப்படுகிறோம். நம் வாழ்வுக்குத் தேவையான அடிப்படை உண்மைகளை இக் குழந்தை நமக்குச் சொல்லித்தருகிறாா். எளிய மனம் கொண்ட ஒவ்வொரு மனிதருக்கும் உண்மையான விடுதலையும் மீட்பும் உண்டு என்பதை அவா் சொல்லித்தருகிறாா்.

இயேசு எதற்காக மண்ணில் பிறந்து மனிதனோடு சங்கமமானாா். என்பதை ஆழமாக உணா்வதன் மூலம் எம் அயலவா்களோடு அவரது ஏழ்மையில் துன்பங்களில் நோவுகளில் இணைவதன் மூலமும், பகிா்வதன் மூலமும் இறைவனின் இரக்கத்திற்கு சான்று பகர முடியும். அத்தோடு நின்றுவிடாது எமது அன்பை, மன்னிப்பை உறவைப் பகிரும் பொழுது தான் இரக்கம் முழுமை பெறுகின்றது.

கிறிஸ்து பிறப்பு விழாவின் போது ஆடம்பரத்திற்கு பயன்படுத்தும் பணத்தை ஒரு ஏழையின் கண்ணீரைத் துடைக்க பயன்படுத்துவது இரக்கமுடைய வாழ்வுக்கு இட்டுச்செல்லும். கிறிஸ்து செல்வராயிருத்தும் மனித குலத்தோடு ஒன்றித்து ஐக்கியமாக்குவதற்கே ஏழையாக மனிதனானாா் கிறிஸ்துவின் பிறப்பு மனுக்குலத்தின் மீதும் மனிதனின் மீட்பின் மீதும் இறை தந்தை வெளிப்படுத்திய இரக்கத்தின் வெளிப்பாடாக விளங்கிக் கொள்ளப்படவேண்டும்.

கிறிஸ்து பிறப்பு விழாவை இரக்கத்தின் விழாவாக பகிர்தலின் விழாவாக நீதியின் விழாவாக கொண்டாடுவதே மிகப் பொருத்தமானது மனிதகுலத்துடன் தன்னை இணைத்துக்கொண்டு இயேசு தம்மை முற்றிலும் வெறுமையாக்கியதே கிறிஸ்து பிறப்பு விழாவின் அடித்தளம் என்பதை மறுக்க முடியாது. கிறிஸ்து நம் ஒவ்வொருவரிலும் குடியிருக்கிறாரென்ற அற்புத உணர்வை ஏற்படுத்தும் புனித பணியில் நம் அனைவருக்கும் பங்குண்டு. இறைசாயலை நம்மிலும் அனைத்து மக்களிலும் காணச் செபிப்பது நமது அன்றாடக் கடமையாகும் நாம் அனைவரும் மறு கிறிஸ்துவாக மாறவேண்டுமென்று இறைவன் விரும்புகிறார்.

எனவே கிறிஸ்தவர்களாகிய நாம், ஏழைகள் அனாதைகள் வாழ்வு ஏற்றம் காண உழைத்திடுவோம். ஒப்புரவுடனே உறவாடி பிறர்நலம் காத்திட விரைந்திடுவோம். மாட்டுக் கொட்டிலில் அல்ல எம் மனங்களில் பிறந்திட காத்திருக்கின்றோம், உம்மை எதிர்பார்த்திருக்கின்றோம் பாலகனே வரவேண்டும்.

அருட்சகோ.மேரியூலியா
மாகாண இல்லம்

Christmas means a spirit of love. – A time when the love of God and the love of our fellow men should prevail over all hatred and bitterness; a time when our thoughts and deeds, and the spirit of our lives manifest the presence of God.

*George F. McDougall*



# நிஜங்கள்

நீர் வளமும் நில வளமும் கடல் வளமும் நிறைந்த வன்னிப் பெருநிலப் பரப்பிலே குரவை என்கின்ற அழகிய கிராமம் உண்டு. உடையார் கட்டு சந்தியில் இருந்து 5 மைல் சென்றால் இக்கிராமத்தை அடையலாம். முச்சக்கர வண்டி, துவிச்சக்கர வண்டி, கால்நடை இவற்றை விட எந்தப் போக்கு வரத்துச் சாதனமும் இங்கு இல்லை. இந்தக் கிராமத்திற்கு நாம் சென்ற போது தம்பிராசா என்பவரின் குடும்பத்தைச் சந்தித்தோம். இவருக்கு வயது 37. இவர் ஒரு புற்று நோயாளி. மனைவிக்கு 34 வயது. 05 பிள்ளைகள். மூத்த மகள் இவ்வருடம் O/L பரீட்சை எழுதுகின்றார். பிள்ளைகள் மிகவும் திறமைசாலிகள்.

தந்தையின் நோயினால் எல்லோருக்கும் கவலை இருப்பதை உணர்ந்து கொண்டோம். வாயில் புற்று நோய் இருப்பதனால் தண்ணீர் சாப்பாட்டைத் தவிர வேறு எதையும் சாப்பிட முடியாது. இடம் பெயர்ந்து முகாமில் இருந்த போது இந்த நோய் வந்ததால் கண்டியில் சென்று சிகிச்சை பெற்று வந்தார். ஆகவே குடும்ப பொறுப்பை அவரின் மனைவி ஏற்று பிள்ளைகளைப் பராமரித்து வருகின்றார். சுதாவிற்கு ஒருநாள் கூலி 600 ரூபா. கணவர் இயலுமான நேரத்தில் வேலைக்குப் போவார்.

இவ்வாறு தனது குடும்ப வரலாற்றை கூறிய போது கண் கலங்கினார். எனது பிள்ளைகள் அன்பானவர்கள். மனைவி என்னை நன்றாக கவனிக்கின்றார். சிகிச்சைக்குச் சென்றால் திரும்பி வர 2,3 மாதங்கள் செல்லும். எனது இரண்டாவது மகள் தரம் 08 படிக்கின்றார். கச்சான் பிடுங்க தோட்ட வேலைக்குச் சென்று எனக்கு ஒரு நெஸ்ரமோல்ட், பிஸ்கட் பெட்டி, 01 சோப் வாங்கி வைத்திருக்கின்றார் என்று கூறி அழுதார்.

எல்லாவற்றையும் எம் இதயத்தில் சுமந்தவர்களாக வரும் போது எமது இல்லத்திற்கு வரும்படி கூறிவிட்டு புறப்பட்டோம்.

எமது இல்லத்திற்கு வந்த இவர்களுக்காக செபித்து சிறிய உதவிகள் செய்தோம். வைத்திய சிகிச்சைகளை யாழ் வைத்திய

சாலைகளில் செய்ய வழிகாட்டினோம். இப்பொழுது யாழ் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இயலுமான நேரத்தில் எமது மகிழ்பூங்காவில் கணவனும் மனைவியும் இணைந்து வேலை செய்வார்கள். ஒரு நாளுக்குரிய கூலி கொடுப்போம். இவர்கள் இப்போது மிகவும் சந்தோசமாக இருக்கின்றார்கள்.



இவர்களின் விசுவாச வாழ்வின் சிறப்பு என்னவென்றால் தாங்கள் உழைப்பதில் 400 ரூபா கொடுத்து முச்சக்கர வண்டியில் குடும்பமாக உடையார் கட்டுக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 06 மணித் திருப்பலியில் கலந்து கொள்வார்கள். இறைவன் உழைக்க சக்தி தருகின்றார். ஒவ்வொரு நாளும் சிறு தொகையாக சேர்த்து திருப்பலிக்கு வருகின்றோம். இது எமக்கு மகிழ்ச்சி என்று கூறினார்.

இவர்களின் வாழ்க்கை எமக்கு ஒரு சவால்.

- ஒவ்வொரு நாளும் நாம் ஒப்புக்கொடுக்கும் திருப்பலிக்கு நாம் கொடுக்கும் தியாகம் என்ன?
- என்னை ஒறுத்து எனது உடலுழைப்பால் அந்த சின்னப்பிள்ளை போல பிறருக்கு உதவி செய்ய முடியுமா?

தம்பிராசாவின் குடும்பத்தில் ஒவ்வொரு நாளும் நத்தார் கொண்டாடுகின்றார்கள். அங்கே அன்பு, மகிழ்வு, பகிர்வு, தியாகம் நிறைந்து உள்ளது. இதுதான் கிறிஸ்துவின் செய்தி. நாமும் தனியாகவல்ல. குழுவாக சிந்திப்போம். நலிவுற்ற மானிடத்தை உயர்த்துவோம். உங்கள் அனைவருக்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

அருட்சகோதரி. எலிசபெத்.அ
புதுக்குடியிருப்பு

# MARTILLAC EXPERIENCE- 2016

From October 17th- 28th 2016 twenty five priest associates of the Holy Family from various countries gathered at Martillac for a formation session and for the General Assembly. Sr.Margaret Muldoon and Sr.Winifreda Wasalathanthrige were our resource persons. Sr. Kumudinie and Michelin of the General council together with the International coordinating committee of the priest associates organized the programme. Sr.Margaret Muldoon dealt with the topic: "The calls and challenges of our common mission of communion for a priest associate today." Sr.Winifreda centered her topic on the theme: "How to understand Pierre Bienvenu Noailles and his call today." The resource persons created in us a new awareness of our charism and to fulfill our ministry meaningfully in the present context according to the signs of the times.



To be at Martillac is to get closer to the Founder and enter into his spirit with deep experience. We were privileged to be there for a few days but each day was with a unique experience. We were enriched by the sharing of each one and challenged to face the reality with a new vision. We became more aware of the cosmic family to which we belong and our responsibility towards every creature. We need to develop tenderness and compassion even to the minute creature of God. The whole creation is a manifestation of God. As humans we need to find our



identity and place in the creation. We have a duty towards the creatures, to nurture life, give due respect with the sense of equality. We are in communion with the whole of creation.

The Island of Martillac is a masterpiece of our Founder who loved nature and was able to experience God in the solitude. He was able to get all the inspirations needed to establish and strengthen the Association. The Founder challenges our life and ministry today as priest associates. The spirit of God Alone and the spirit of communion were the main force to move the life of PBN. This was the root of his spirituality.



There are many challenges in the world today. Globalization, technology and secularism are affecting our life and ministry. Besides we face the challenges of the marginalized, poor, child abuse, sexual harassments, women trafficking, drug addicts and alcoholics. What is my role or responsibility towards such affected ones?. God calls us to come out of comfort zones and reach the periphery. His call is to become one with the poor with simplicity and detachment. We need to realize that all are children of God. God is alive in all and all are to live in communion. God is present in all creatures.

It is not enough to get enlightened by a new vision but it is more important to change the way of life to respond to the need of the hour. We need to do something to uplift the life of our neighbor. We become aware of our duty towards every creation. We are conscious of our responsibility to promote communion.

*Fr.Jacob Nicholas*

# உறைந்திடு எம் மனங்களில்...

தூதன் கபிரியேல் தூது சென்றான்
மரியா என்னும் மாதிடம்
அருள்மிகப் பெற்றவளே என
அருள்மொழி பகர்ந்தான் அன்று
திகைத்தாள் பதைத்தாள் செய்வதறியாது
அறியேன் கணவனை
ஆனாலும் ஆண்டவன் சித்தம் அதுவா! "ஆம்" என
அடிபணிந்தாள் அக்கணமே.

பத்துமாதம் பக்குவமாய் சுமந்தாள்
பாலகன் இயேசுவை எமக்காக
மார்கழி குளிரும் பனியும் ஒருபுறம்
மரியாவின் பிரசவ வேதனை மறுபுறம்
மாடடைக் குடிலில் மலர்ந்தார் பாலகன்
மானிடர் எமக்காக.

காலங்களில் மாற்றம், அரசியலில் மாற்றம் ஏன்!
எம் அன்றாட நடையுடை பாவனையில் மாற்றம்
தொலைந்த எம் உறவுகள் திரும்பவில்லை
சூறையாடப்பட்ட எம் காணிகள் கிடைக்கவில்லை
தொடர்கதையாகும் சோகங்கள்
அமைதியற்ற எம் மனங்களில்
ஆண்டவா பிறந்திட நீ வருவாயா?

இளையோர் வாழ்கையெல்லாம் இன்னலும் இடருமையா
வேலையில்லா பிரச்சினை விரக்திக்கு வழிகாட்டுதையா
இறைமகனே மரிமகனே இளமையைக் காத்திட
எம் அகம் பிறந்திடுவாய்.
விஞ்ஞான யுகமதில் விடுதலை தேடுகின்றோம்
புது விடியலை நாடுகின்றோம்
நிந்தனை செய்வோர் சிந்தையில் உம் அன்பு ஊற்றெடுக்க
எம் மனங்களில் உறைந்திடுவாய்.

அருட்சகோ. ஜெஸ்மின் யேசுநேசன்

# நான் பெற்ற இறை அனுபவம்

“ஆண்டவரை எனதுள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது.” என் மீட்பராம் கடவுளை நினைத்து எனதுமனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர்தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். (லூக் 1:44 - 48).

நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளை, சுயநினைவின்றி என் கண்களை மூடி படுத்திருந்தேன். அருட்சகோதரிகள், மக்கள் அனைவரும் என்னைச் சூழ நின்று செபித்துக் கொண்டிருக்கின்றார்கள் இறைஆவி எம்மைச் சுற்றிகொண்டிருந்தது. இது படிப்படியாக மறைய சகோதரி றோஸ்மலர் நடுவில் இரு கரங்களையும் விரித்தபடி செபித்துக் கொண்டிருந்தவேளை, அவரது கண்ணில் இருந்து ஒளி வெளிவந்து அறை முழுவதையும் நிரப்பி சிறிதுசிறிதாக மறைந்தது. சிறிது நாட்களின் பின் உன்னை நான் “ஐந்து நாட்களில் குணப்படுத்திவிட்டேன்” என்ற இறைவனின் குரலொலியை நான் கேட்டேன், அதற்கு பதில் “நன்றிஆண்டவரே” என பதில் அளித்தேன். சிறிதுநேரத்தின் பின் வைத்தியர்கள் என் காயத்தைப் பார்த்து பூரணசுகம் அடைந்து விட்டீர் என்று கூறியபோது நான் கேட்டது இறைகுரல் என்பதை உணர்ந்தேன். உடற்பயிற்சி பெற்று ஐந்து நாட்களில் வைத்தியசாலையில் இருந்து விடைபெற்றேன்.

“ஆனந்தம்,ஆனந்தம் என் மனதில் ஆண்டவா உனைப்பாட....எனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி உணர்வுகளை தெரிவிக்க விரும்புகின்றேன். முதலில் என்னைப் படைத்து உருவாக்கி பெயர்சொல்லி அழைத்த இறைவனுக்கு எனது கோடானகோடி நன்றிகள். கொடியநோயால் பாதிக்கப்பட்டு இருந்த என் மீது அவருடைய இரக்கம் நிறைந்த பார்வைபட்டது. அவரது காயப்பட்ட கரம் என்னைத் தொட்டது. சாவின் நிழலில் இருந்த எனக்கு புதுவாழ்வு தந்தது. இறைஅன்பு அளவிட, ஆழங்காண முடியாதது. எல்லாவற்றையும் கடந்தது, தகுதியற்ற என்னை அன்பினால் தொட்டார். புதுவாழ்வைத் தந்தார்.

என் அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய மாகாணத்தலைவி அருட்சகோதரி. கிறிஸ்ரா ஆலோசகர்கள் அனைவருக்கும் நன்றிகள். நீங்கள் காட்டிய அன்பு, கரிசனை, அக்கறை என்னை குணப்படுத்த ஒவ்வொருவரும் எடுத்தமுயற்சிகள் செலவழித்த நேரங்கள், செபங்களை நன்றியோடும், பாசத்தோடும் நினைக்கின்றேன்.

நான் நோயில் இருந்தவேளையில் அன்போடும், செபத்தோடும் பராமரித்த அருட்சகோதரிகள். தியோவின் குருஸ், ரேவதி, மரியமலர் குழுச்சகோதரிகள் அனைவருக்கும் தொடர்ந்தும் அன்போடும் கரிசனையோடும் பராமரிக்கும் சகோதரிகள் சாந்தி, றோஸ்மலர், குழுச்சகோதரிகள் அனைவருக்கும் என் நன்றிகள். அன்புடன் செபித்து மறுவாழ்வை பெற்றுத்தந்த மாகாணத்திலுள்ள அனைத்து சகோதரிகளுக்கும், ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை, அருட்தந்தையர்கள், மக்கள் அனைவருக்கும் எனது தங்கை சியா, சில்வி, பபு, காமினி அனைவருக்கும் என் செபங்களோடு கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

‘‘ஆண்டவரே உமது பெயருக்கு நன்றி செலுத்துவேன்’’. திரு.பா. 53:6

*Sr. Marina. A*



# அன்பான உறவுகளே !!

எமது தகவற் சேவைக்கென நீங்கள் அனுப்பிய ஆக்கங்கள், ஒத்துழைப்புக்காக, எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம். தொடர்ந்தும் உங்களது ஆக்கபூர்வமான ஆக்கங்கள், ஆலோசனைகள், விமர்சனங்களை எதிர் பார்க்கின்றோம்.

அடுத்த இதழுக்கான உங்கள் படைப்புக்களை, 10.03.2017 இற்கு முன்னர், எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் படைப்புக்கள், பின்வரும் கருப்பொருளின் மையமாக அமையட்டும்.

- **சிலுவையின் பாதையில்**
- **இயேசுவின் உயிர்ப்பு**
- **வெருமையான கல்லறை**
- **உயிர்ப்பு விழாவின் அர்த்தம் என்ன?**

உங்கள் தொடர்புகளை விரைவாக்கி, எமது சேவையை இலகுவாக்குங்கள்:
மின்னஞ்சல் முகவரி;
**sangamuminfo@gmail.com**

"Before you speak, let your words pass through three gates;
At the first gate, ask yourself, Is it true?,
At the second ask, Is it necessary?,
At the third gate ask, Is it kind?"